திராவிடநாடு

7—8—60 | வார வெளியீடு | விலை 16 காசு

போர்க்கோலம் பூண்!

—[முத்து]—

வடக்கிருந்து வீசுகின்ற இந்தியெனும் பேய்க்காற்று
திடங்கொண்டோர் உளமெல்லாம் திகைப்பூட்டும் ஊழித்தீயே!
படம்விரிக்கும் பெரும்பாம்பு பகைப்புலத்தின் பாழ்மொழியே!
சடங்களென் றேநினைத்தார்; சமர்புரியும் பேரினத்தோர்!

மறவேந்தர் மரபென்றாய்! மறமெங்கே? மாண்பெங்கே?
அறங்கூறும் நல்லினத்தின் ஆற்றல்தான் எங்கே?
புறங்கூறும் புல்லறிவோர் சூழ்ந்து விட்டார்
பறிக்கின்றார் உன்தாயின் வளமான நல்வாழ்வை!

பதைபதைக்க உன்தாயை அறுப்பதற்கோர் கொலைவாள் இந்தி!
சிதைமூட்டி அவளுடலை நீறுக்கும் வீண்முயற்சி!
வதைக்கின்றார்! வயனமொழி பேசியுனைச் சிதைக்கின்றார்!
கதைவேண்டாம்! காரியத்தில் கண்வேண்டும்! போராடு!

மொழிகளிலே தலையினதாம் தமிழ்மொழியின் திருமகனே!
பழிவேண்டாம்! உன்நாட்டின் இளவல்கள் எதிர்காலம்
அழிவதையோ விரும்புகின்றாய்? ஆக்கம் எங்கே?
இழிவுதுடை! எழுந்திருநீ! போர்க்கோலம் பூண்!

அது மிகச் சிறிய குடும்பம்; மிக மிகச் சிறிய குடும்பம் என்றே சொல்லலாம். ஏழைக் குடும்பமுங் கூட. அதன் உறுப்பினர் இரண்டே பேர். இருவரில் ஒருத்தி பெண்பால். வயது அறுபதுக்கு மேலிருக்கக்கூடும். நரைத்து வெளிறிய தலைமயிர் அவள் முதுமையை அதிகமாக்கிற்று. கணவனை வெகு நாட்களுக்கு, வெகு காலத்துக்கு முன்னரே இழந்துவிட்டவள். எனவே நறுமணப் பொருள்களை இழந்த அவள் முகம், பொலிவிழந்து சுருக்கங் கண்டு சோர்ந்து கிடந்ததில் வியப்பில்லை. வற்றி உலர்ந்த இரவ மரத்தின் வித்தினைப் போன்ற கண்களுடைய வற்றிய அவள் உடலுறுப்புகள் அவள் முதுமைக்குச் சான்று பகர்ந்தன.

வாழவேண்டிய வயதில் வாழ்ந்து, பெறவேண்டிய இன்பங்கள் எல்லாம் பெற்றுத், துய்த்து, 'ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர்' அவள். அவள் முதுமைக்கும் சோர்வுக்கும் ஊடே அணுத்துகளாய், மின்னணுவாய்ப் பொறிவிடும் மற உணர்வைக் கண்டாயா? அது ஏனென்று புரிகிறதா?

அவள் கணவனை இழந்தவள் என்பதை முன்னரே கண்டாய். ஆனால் தன்னுடன் வாழும் தன் அன்பு மகனை — ஆசைத் திருப் புதல்வனைக் காணும்பொழுதெல்லாம்— அவன் தோள் வலிவை, அத்தோள் வாள் சுழற்றும் வடிவழகை, அது கொய்து வரும் தலைகளின் எண்ணிக்கையைப் பார்க்கும் பொழுதெல்லாம்-அந்த மறக்குலத்து நரை மூதாட்டிக்குத் தன் காதற் கொழுநனின் கவின் நினைவு நிழலாடுகிறது. அந்த மகிழ்ச்சியே அவளை இன்னும் வாழ வைத்துக்கொண்டிருந்தது. அவளுடைய ஆசைக்குரிய அந்த மகன் தான் அவளுடனே அந்தச் சிறிய ஏழைக் குடும்பத்தில் வாழ்ந்து கொண்டிருந்தவன்.

அப்படிப்பட்ட அன்பு மகனுக்கு ஆணையொன்று பிறந்தது. 'அணியிலே சேர்தற்கு அடுபோர்க் களம் வா—அதுவும் கடிதில்வா' என்று. தயங்கினனா மகன்? இல்லை! அவன் தான் மறக்குலத்துத் தோன்றலாயிற்றே—போர்க் களத்தே வீரம் விளைத்துத் தழும்பு தாங்கும் தமிழ் மகனாயிற்றே! தாய்மட்டும் மறுத்தாளா என்ன? 'ஒரே செல்வ மகனை [illegible] தன் கணவனுக்குப் பிறகு தானே' என்று கலங்கினளா என்ன? 'பாறுமயிர்க் குடுமி எண்ணெய் நீவி' தன் ஒரே சிறுமகனைச் 'செருமுக நோக்கிச் செல்கென விடுத்த' மறம் பொங்குந் தாய்க் குலத்தின் திலகமல்லவா அவள்? விருப்போடு விடை கொடுத்தாள்,

பாலில் பிரை

[முத்து]

வித்தகரைப் புரிந்துகொள்ளாமல், விவேகமின்றி வேல் வீச வந்த வீணர்கள் அழிக்கப்படட்டும் என்று—அவர்தம் வெறிச் செயல் அடக்கப்படட்டும் என்று.

தாய் மனம் பூரிக்கப் பொங்கியெழுந்தான் மகன்; போர்க்கோலம் பூண்டான். தினவெடுக்கும் தோள்களுடன் 'தீம், தீம்' எனப் பகைவர் படை நடுவே புகுந்துவிட்டான். பாய்ந்து வந்த பரிக்கூட்டத்தின் நடுவே சிங்கமென வாள் சுழற்றிப் போரிட்டான். அவனைத் தூக்கித் தாக்க வந்த துங்கக் கரிகள் எல்லாம் தும்பிக்கை யறுந்து வீழ அலறியோடின. சூறாவளிபோன்று சுழன்று சுழன்று, பாய்ந்து, பாய்ந்து பகை மறவரிடை பொருதான் அவன்.

கொஞ்சம் வாங்கி நின்று சுற்றிப் பார்த்தான். தன்னுடன் வந்தவர் தொகை அருகியிருக்கக் காண்கிறான். எனினுங் கொஞ்சமும் நெஞ்சம் கலங்காமல் ஒரு குடப் பாலில் தன் சிறு விரல் நகத்தால் ஒரு துளி பிரையை ஆய்மகள் ஊற்றினால், அந்தக் குடத்துப் பால் முழுமையும் கெட்டுத், திரிந்து போவதுபோல, அவன் தான் ஒருவனே தனித்து நின்றானாயினும் மாற்றார் படைமுழுதும் மயங்கிக் கலங்கிக் கலையும்படி செய்தான். அவன் வீரன்—தமிழ் வீரன். அவனுக்கு வீரம் ஒரு விளையாட்டு, ஒன்னார் வீணர்கள்—விவேகமற்றவர்கள்—விரிவாகச் சிந்திக்காமல் வீரர்கள் நாட்டில் கொடி போட வந்தார்கள்.

போரின் தொடக்கமுதல் இறுதி வரை இந்தக் காட்சியைக் கண்டு இறும்பூதெய்தினார் மதுரைப் பூதன் இளநாகனார் என்னும் தமிழ்ப் புலவர். அந்த மறவனையும் அவனை ஈன்றெடுத்த மாதாவையும் நன்கறிவார் அவர். எனவே தன் உணர்வு மிகுதியைப் பெருமிதக் குறிப்புத் தோன்ற ஆறு வரிகளில் ஒரு பாடலாகப்

"நறுவிரை துறந்த நரைவெண் கூந்தல்
இரங்காழ் அன்ன திரங்குகண் வறுமுலைச்
செம்முது பெண்டின் காதலஞ் சிறுஅன்
மடப்பால் ஆய்மகள் வள்ளுகிர்த் தெறித்த
குடப்பால் சில்லுறை போலப்
படைக்குநோய் எல்லாம் தானாயினனே."

—புறம் 276.

புறங் காட்டுங் காட்சி இது—புறம் தரும் பாட்டு இது.

யாருக்கும் யாருக்கும் போர்? தெரியாது! போர் நடந்த இடமில்லை, காலமுமில்லை. வீரர்கள் நாட்டில் விழுதுவிட்டு ஆட்சி செலுத்தத் திட்டமிட்ட வீணரான வேற்றாரை, வேரறுந்து வீழுமாறு வீரம் விளைத்து, விழுமிய புகழ் படைத்த அந்த வீரன் பெயராவது தெரிகிறதா? அதுவும் இல்லை.

பெயர் தெரியாவிட்டாலும் தம் தாயகத்துக்காகத் தம் உடல், பொருள், உயிரைப் பலி கொடுத்துப் போரிட்ட வீரர்களைப் பெற்ற பூமி உன்னுடையது. தமிழ்மகனே! எண்ணிப்பார். உன்னை, உன் மொழியை, உன் கலையை, உன் பழக்க வழக்கங்களை, உன் இனத்தைப் பூண்டோடு ஒழிக்கச் சதித் திட்டம் தீட்டியவாறு உன் கன்னித் தமிழகத்தினுள்ளே நரிக் கூட்டம் ஒன்று புகுந்திருக்கிறது. நீ என்ன செய்யப்போகிறாய்? உன் கடமை என்ன?

உன் நெஞ்சு தூய்மையாக இருக்கிறது. உன் கருத்துக்களில் பழுதில்லை. உன் கைகளிலே கறை இல்லை; வலிவுண்டு. உன் கொள்கைகளுக்கு நாட்டில் கொள்ளை ஆதரவு உண்டு. நீ பிறந்த தமிழகத்தின் மானங்காக்க உனக்கு ஓர் ஆய்வுக் காலம் இது. புறப்படு மகனே! புறப்படு! பொங்கியெழும் பூந்தமிழர் பண்புதனைப் புவனியெங்கும் பரப்பும் வகை செய்தற்குப் புறப்படு! தூங்கிவிட்ட தமிழர்களைத் தொட்டெழுப்பித், தாக்க வரும் துரோகத்தைத் தூள் செய்யப் புறப்படு... அதுவே உனது உடனடியான கடமை.

இந்தியாம், இந்தி!! அது எப்பக்கம் வந்து இப்பக்கம் புகுந்திடும் என்று வீர முரசொலி கொட்டி, மன்றம் அமைத்து, தென்றல் தேடும் திராவிடனே, தென்னகம் காணத், தேன்மொழி பயிலத் திராவிட நாடு அழைக்கிறது —புறப்படு, புறப்படு — நம் நாடு நமதாக நல்ல வாய்ப்புக் கிடைத்த தென்று புறப்படு—அதோ படை வரிசை அணி அணியாக நிற்

தீர்மானம் போதுமா!?

மலர் 19] ஆண்டுச் சந்தா ரூ. 8. (7—8—60) தனிப் பிரதி 16-காசு [இதழ் 4

தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சிக்கான பெரிய முயற்சி ஒன்றையும் இதுவரை காங்கிரஸ் ஆட்சி செய்தது இல்லை என்பதை நாம் ஆதாரங்களோடு அடுக்கடி எடுத்துக்காட்டியுள்ளோம். பல தொழிற்றுறைத் தலைவர்களும் நம்முடைய இந்தக் கருத்தை அவ்வப்போது கூறிவருகின்றனர். நல்ல மனமும், சிந்திக்கும் திறமையும் கொண்டவர்கள் அத்தனை பேரும் இதனை மறுப்பதில்லை. தெற்குத் தேய்கிறது. வஞ்சிக்கப்படுகிறது என்ற இந்த மாபெரும் உண்மை, வெறும் சொல் அலங்காரம் அல்ல—இட்டுக்கட்டிக் கூறப்படுவது அல்ல—பிரச்சாரத்துக்காகச் சொல்லப்படுவதும் அல்ல.

அமைச்சர்களின் நெஞ்சங்களிலும், பெரிய காங்கிரஸ் தலைவர்களின் உள்ளங்களிலும் இந்த உண்மை முள்ளாகக் குத்துகின்றது. 'உண்மைதான்' என்று உணருகின்றனர். வெளியே சொல்லவும் நாணம்; மூடி மறைக்கவும் முடியவில்லை. அப்படிப்பட்ட நெருக்கடி நேரங்களில் பாரம் தாங்காது சுவரில் விரிசல் தெரிவதுபோலத், தங்கள் உள்ளத்தில் இருப்பதைச் சிறு சொற்களாகவும், பெருமூச்சாகவும் வெளியிட்டு விட்டுத் திருப்தியடைகின்றனர்.

அண்மையில் மதுரையில் கூடிய காங்கிரஸ் கமிட்டி நிறைவேற்றியுள்ள தீர்மானம் ஒன்று, தமிழ் நாட்டுக் காங்கிரஸ்காரர்களின் நிலைமையைத் தெளிவாக்குகின்றது.

தமிழகத்தில் பெரும் தொழில்கள் ஒன்றும் துவங்கப்படவில்லை என்பதையும் உணருகிறார்கள். ஆனால் அதை அப்படியே வெளியில் சொல்லவும் முடியாது. ஆனால் சொல்லாமலும் இருக்கமுடியவில்லை, இன்னுங்கொஞ்சம் தமிழ் உணர்ச்சி மிச்சம் இருப்பதினால்! ஆகவே நாசுக்காகத் தங்கள் நிலைமையைத் தீர்மானமாக நிறைவேற்றியுள்ளனர்.

> "சென்னை இராஜ்யத்தின் மூன்றும் ஐந்தாண்டுத் திட்டத்தில், இந்த இராஜ்யத்தில் கிடைக்கும் மூலப்பொருள்களையும் பழுப்பு நிலக்கரியையும் பயன்படுத்திக் கனரகத் தொழிற்சாலைகள் அமைக்கும் திட்டங்கள் சேர்க்கப்படவேண்டும்"

என்று அந்தத் தீர்மானம் அரசினருக்கு யோசனை சொல்கிறது. முதல் இரண்டு திட்டங்களில் வடக்கே உள்ள மாநிலங்கள் பெரிய பெரிய திட்டங்களைக் கொண்டு தொழில்களையும், அணைகளையும் ஏற்படுத்திக்கொண்டன. தமிழ் நாடோ—தென்னகமோ—கூடை முடைதல், பாய் பின்னுதல்—அப்பளம் செய்தல், முதலியவற்றைத் 'தொழில்கள்' என்று சொல்லித் திருப்திபட்டுக்கொள்ளும் நிலையில் இருக்கிறது. இதையாவது காப்பாற்றிக்கொள்ளுவதற்காகத்தான் சென்ற கிழமை நாம் எடுத்துக்காட்டியதுபோல, சிறு கைத்தொழில் பொருள்களுக்கான விலை ரூ. 15% அதிகம் தந்து அந்தப் பொருள்களை வாங்குவது என்று அமைச்சர் அவை தீர்மானித்தது.

மூன்றும் திட்டத்திலும் இதே நிலை நீடிக்குமானால், நாம் ஏமாந்துவிடுவோம் என்பதினால்தான் 'ஆயிரம் கோடியேனும் வேண்டும்' என்று நமது இயக்கச் சார்பில் சொல்லப்பட்டது. அப்போது அதைப்பற்றிப் பலவிதமாக அமைச்சர்கள் கேலி பேசினர்.

ஆனால் காங்கிரஸ் கமிட்டிகூடிப், பெரும் தொழில்களை மூன்றாவது திட்டத்தில் தொடங்கவேண்டும் என்றும், அதற்கான மூலப்பொருள்களுக்கு என்ன செய்வது என்று ஏங்கவேண்டாம், இந்த இராஜ்யத்தில் உள்ள மூலப் பொருள்களைப் பயன்படுத்த வேண்டும் என்றும் கூறுகின்றது. இதையே பிறர் கூறுகின்றபோது ஏளனம் செய்யத் தோன்றுகின்றது; எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பேசத்தோன்றுகின்றது. ஆனால் சொந்தக் கட்சியினர், தீர்மானம் நிறைவேற்றுகின்றனர்.

எனவே, தீர்மானம் நிறைவேற்றி விட்டால் போதும்; எல்லாம் நிறைவேறிவிடும் என்று காங்கிரஸ்காரர்கள் கருதுவார்களேயாயின் அவர்கள் பெரும் ஏமாற்றமே அடையவேண்டிவரும்.

ஏனெனில், மத்திய சர்க்கார் "மயிலே மயிலே இறகுகொடு" என்று சும்மா கேட்டால் கொடுக்காது. "எதையும் கிளர்ச்சிகளின் மூலம் காண்பித்தால்தான் வடக்கேயுள்ள தலைவர்களுக்கு விளங்கும்" ஆகவே தீர்மானம் போதும் என்று அமைதிகொண்டுவிடாமல், திடமனத்தோடு மேலும் மேலும் இதனை வலியுறுத்தி, வடக்கே சென்று வாதாடி, நியாயமான பங்கைப் பெற்று இனியேனும் ஏதேனும் கிடைக்க வழி செய்வார்களாக.

தனிமை!

—(கனகு)—

நீண்ட காலமாக அந்த இடத்தில் கள்ளியும், கற்றாழையும் வளர்ந்து கிடந்தது. செடிகளும், கொடிகளும் மண்டிக்கிடந்த இடம். புல்லும், புதருமாய்க் காட்சி தந்த இடம். இப்போது அந்த இடத்தை யாரோ புதியவன் ஒருவன் விலைக்கு வாங்கிவிட்டான். அங்கே ஒரு பெரிய மாளிகை எழும்பப்போகிறது. வண்டி வண்டியாகச் செங்கற்கள் கொண்டு வந்து குவிக்கப்பட்டன. கூலியாட்கள் ஓயாது, ஒழியாது உழைத்துக்கொண்டிருந்தனர். அந்தக் கூலியாட்கள் தமக்குள் உரையாடிக் கொள்ளவில்லை. அதற்கு அவர்களுக்கு நேரமில்லை. உழைப்பு, கடுமையான உழைப்பு; ஓய்வில்லாத உழைப்பு. பெறும் கூலி சிறிதளவே என்றாலும் பேசுதற்கும் ஒழிவில்லாத பேருழைப்பு.

அங்கே குவிக்கப்பட்டுக்கிடந்த செங்கற்கள் உரையாடிக் கொண்டன.

"அண்ணே, எங்கே உன் தோழனின் பேச்சரவத்தையே காணோம். சூளையிலிருந்து வண்டியேறி வந்த போதுகூட மிகவும் கலகலப்பாகப் பேசிக்கொண்டு வந்தானே! இப்போது ஏன் இருக்குமிடம் தெரியாமல் அமைதியாகிவிட்டான்?

"அவன் இருக்குமிடம் தெரியவில்லையப்பா. உண்மையாகவே தெரியவில்லை. எப்படியோ குவியலுக்குள் அகப்பட்டுக்கொண்டு விட்டான்."

"அட பாவமே! உள்ளே அகப்பட்டுக்கொண்டுவிட்டால், அவன் கதி என்னாகுமோ? ஒரு வேளை நெருக்கத்தால் நொறுங்கிச் சிதைந்துபோனாலும் போவானே!"

"போகட்டும். வேறு என்னதான் செய்யமுடியும்? அவனவனுக்கும் கொடுத்து வைத்த அளவுதானே கிடைக்கும்"

"கொடுத்து வைத்தாவது, கொடுக்காது வைத்தாவது? எல்லாம் கர்மவினையண்ணே, கர்ம வினை."

அவ்வேளை கலகலவென்ற சிரிப்பொலி அவற்றின் காதுகளில் வந்து மோதியது. ஒலி வந்த பக்கம் இரண்டும் திரும்பின. அங்கே தன்னந் தனியாகக் கருங்கல் ஒன்று கிடந்தது.

"ஓ, நீங்கள்தான் சிரிக்கின்றீர்களா? அதுதானே பார்த்தேன்! உங்கள்பாடு பரவாயில்லை. உங்களுக்கு அச்சமே வேண்டுவதில்லை. உயரமான மலையிலிருந்து கீழே தூக்கிப் போட்டாலும் நீங்கள் உடைந்துபோக மாட்டீர்கள். எங்கள் நிலையைப் பாருங்கள். எவ்வளவு அஞ்சி வாழவேண்டியிருக்கின்றது!—அது சரி, நீங்கள் ஏன் அப்படி உரக்கச் சிரித்தீர்கள்?"

"நான்கூட எதை எதையோ எண்ணிக்கொண்டு இவ்வளவு நேரம் கவலையாகத்தான் கிடந்தேன். உங்கள் உரையாடலைக் கேட்டதும் என்னையறியாமல் சிரிப்பு வந்துவிட்டது. மனிதர்கள் தாம் ஒரே பொருளில் இரண்டு மொழிகளைக் கலந்து, சேர்த்துப் பேசுவார்கள், கர்மவினை சேமநலன் என்றெல்லாம். நீங்களும் அப்படிப் பேசியதைக் கேட்டதும் என்னை அறியாமல் சிரிப்பு வந்துவிட்டது."

"மன்னித்துவிடுங்கள். அந்தக் கேடுகெட்ட மனிதர் சிலரைப் போல், தாய்மொழியில் ஒரு பொருளைக் குறிக்க நல்ல பல சொற்கள் இருக்கும்போது அவற்றை எல்லாம் ஒதுக்கிவிட்டு, பிறமொழிச் சொற்களையும், பிறமொழி எழுத்துக்களையும் தேவையின்றி வேண்டுமென்றே கையாளுகின்றனர் போல் நானும் அவசரத்தில் ஏதோ கூறிவிட்டேன். நல்லவேளை நீங்கள் என் பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்து திருத்தினீர்கள். நன்றி.

"ஆமாம். இந்த வட்டாரத்தில் கற்களையே காணமுடியவில்லையே! நீங்கள் மட்டும் எப்படி இங்கே தனிமையாகக் காணப்படுகின்றீர்கள்?"

"தனிமையாகக் காணப்படுகின்றேனா?—கிடக்கின்றேன். நீண்ட நெடு நாட்களாகக் கிடத்தப்பட்டுள்ளேன். வேதனையில் புழுங்கிக் கொண்டு, துன்பத்தைச் சுமந்து கொண்டு, வாழ்க்கையையும், வளத்தினையும் எண்ணி எண்ணி ஏங்கிக் கொண்டு கிடக்கின்றேன். பார்த்தோர் எல்லாம் இரங்கவும் எள்ளவுமான நிலையைப் பலகாலும் தாங்கிக்கொண்டு கிடக்கின்றேன்.

"எனக்குச் சொந்த ஊர் திண்டுக்கல்லுக்கு அருகில். அங்கே நான் பெரிய பாறையாக இருந்தேன். உற்றாரோடு, உறவினரோடு ஒரு குறையும் இல்லை என இறுமாந்து வாழ்ந்துகொண்டிருந்தேன். அந்த வேளையில் வந்தார்கள் கல்லுடைக்கும் தொழிலாளர்கள். என்னை உடைத்தார்கள்; பிளந்தார்கள். பெரிய பாறையாக இருந்த என்னைச் சிறு சிறு துண்டுகளாக நூற்றுக்கணக்கில் கூறு போட்டார்கள். அப்பப்ப! அப்போது நாங்கள் பட்ட வேதனை கொஞ்சமா!

"எப்படியோ ஒரு வகையில் வேதனையைப் பொறுத்துக்கொண்டிருந்துவிட்டோம். மாதக் கணக்கில் நானும், என் உடன் பிறந்தோரும் ஒரே இடத்தில் குவிக்கப்பட்டுக்கிடந்தோம். எங்கள் உடலில் ஓரிடமும் எஞ்சுதலின்றி ஏற்பட்டிருந்த புண்கள் எல்லாம் தழும்பாகக் காட்சியளித்தன. மெல்ல மெல்ல எங்கள் நோய்த் துன்பம் அகன்றது. உடன் பிறந்தாரோடு, மற்றும் சுற்றத்தாரோடு சேர்ந்து ஓரிடத்தில் குவிந்து கிடந்து வதிவது உள்ளத்தில் ஓரளவு அமைதியைத் தந்தது. அவ்வேளை நாங்கள் கண்டுகொண்டிருந்த—வேதனைக்குப் பின்வந்த—

(15-ம் பக்கம் பார்க்க)

சாந்த குமாரி,
கழகச் செல்வி,

காஞ்சீபுரம்

7—8—60.

தம்பி!

என்ன, என்னைக் கண்டதும், உன் முகத்தை ஒளிவிடச் செய்துகொண்டிருந்த
அந்த 'வசீகர'ப் புன்னகையை மறைத்துக்கொண்டு, கோபமும் சோகமும் காட்ட
முயற்சிக்கிறாய்? எதையோ எண்ணி எண்ணி, மகிழ்ந்துகொண்டிருந்திருக்கிறாய்—
புன்னகை பூத்திடக் காரணம் அதுவே—எனினும் என்னைக் கண்டதும், புன்னகை
யைத் திரையிட்டு மூடிவிடுகிறாய், புதியதோர் கோலம் கொள்கிறாய்-எதை உணர்த்த?
—அடே! அப்பா! இலேசான ஆளல்லவே, நீ!! எழுச்சிக்கு இருப்பிடம்! வீரத்தின்
பிறப்பிடம்! உணர்ச்சியின் உறைவிடம்! அல்லவோ — உன்னை நான்
அறியேனா? உன் இயல்புகள் எனக்கு நன்கு தெரிந்திருப்பதனால்தானே,
எத்தனை எத்தனையோ கற்று மெத்தத் தேறியவர்கள் எதிர்ப்போர் எண்
ணிப் பார்த்திடக்கூட அச்சப்படும், நாட்டு விடுதலைக் கிளர்ச்சியை
நடாத்தி வெற்றிபெற முடியும் என்ற உறுதியும் நம்பிக்கையும் என்
போன்றோர்களுக்கெல்லாம் ஏற்படுகிறது. அந்த உன் இயல்பு, உன்னைப்
புன்னகை புரிந்திட வைக்கிறது, அதனாலே, பொய்க் கோபம் காட்ட
வும் செய்கிறது. அண்ணன் காணா நேரத்தில், அகமகிழ்ச்சி; வெளியே
தெரியுமளவு புன்னகை கொள்கிறாய்; காணும்போதோ, இது போதாது அண்ணா!
என்று கூறிட ஓர் பொய்க் கோபம் காட்டுகிறாய். புரிகிறது! புரிவதால், உன்னிடம்
உள்ள பற்றும் மதிப்பும், வளரவும் செய்கிறது! வீரச் செயல்களை அடுக்கடுக்காகத்
தொடர்ந்து மாற்றார் மருண்டு மண்டியிடும் அளவுக்குச் செய்தவண்ணம் இருக்கத்
துடிக்கிறாய்! இளமைத் துடிப்பு என்று மட்டுங்கூட இதனைக் கூறுவதற்கில்லை—
இலட்சியத்திலே உனக்குள்ள ஆர்வம், உனக்கு அத்தகைய உணர்ச்சியைத் தரு
கிறது. பகை அழிக்கத் துடிக்கிறாய்! பகை அழித்தே சிகை முடிப்பேன் என்று
சூளுரைத்துக் களம் புகும் பண்டைய வீரத்தின், இன்றைய 'பதிப்பாக' விளங்கு
வருகிறாய். வாழ்க நின் வீர உணர்ச்சி! வளர்க உன் போரார்வம்!!

எதற்கு அண்ணா, போரார்வம், வளருவது? ஏன்? வளர்த்துவிடுவாய், பிறகு,
ஒரு கணத்தில், அதற்கு இது சமயமல்ல, தேவைப்படவில்லை என்று கூறிவிடுவாய்!!
இதற்கா இத்துணை ஆர்வம் பொங்கிடக் கிளர்ந்து எழுந்தோம், என்று, பிறகு நான்,
நொந்துகொள்ளவேண்டும்—ஏனோ, இந்தப் போக்கு? பாடி வீட்டிலே பரணி பாடிப்படி
இருந்திடவேண்டி வருகிறதே, பகைக் கூட்டம் பழிச் சொல்லையும் இழிமொழியையும்
உமிழ்ந்தபடி நடமாடக் காண்கிறோமே; அவர்தம் கொட்டம் அடக்க, நமக்கோர்
வெற்றி கிடைக்க, செருமுனை சென்று ஏறிப் போரிடவேண்டாமோ, சிந்தனையில்
பிறந்து வளர்ந்துள்ள எத்தனை எத்தனையோ செயல்முறைகளை, வடிவமெடுக்கச்

புலவர் மூவர் முரசொலி....

செய்து காணவேண்டாமோ!—அந்த என் நிலைமைத் துளியும் உணராமல், அடலேறே! வா! வா! என்று அழைக்கிறாய்; அணிபணி மறந்து ஆடல் பாடல் வெறுத்து, குடும்பத்தையும் துறந்து, நீ கூப்பிடும் குரல், கோலமயிலாள், குழல் மொழிக் குழவி, பாசம் பொழியும் அன்னை, இவர்தம் குரலினும் மேலானது என்று எண்ணி, நான் ஓடோடி வருகிறேன்; வந்தவனை நோக்கி, "வல்லமை மிக்கவனே! பொல்லாங்கு அறுப்பவனே! ஆற்றல் மிக்கோனே! அறப்போர் வீரனே! இப்போது இல்லை, உன் வீர விளையாட்டுக்கு வாய்ப்பு! பிறிதோர் சமயம் பார்ப்போம்! சென்று, வா!" என்று கூறுகிறாய், என்னைச் செயலாற்ற இயலாதவனாக்குகிறாய்—ஏன் இப்படி என்னை வாட்டுகிறாய், அண்ணா!—என்றெல்லாம் கேட்கிறாய். கோபமல்ல, தம்பி! மனம் குளிர்ச்சி அடைகிறது, உன் நோக்கம் காணும்போது!

ஆமாம்! கோபம்காட்டுகிறாய்—அதற்கான காரணம், உன் மனம் மகிழத்தக்க அளவுக்கு, வல்லமை விளங்கிடத்தக்க வகையில், அறப்போர்க்களத்திலே செயலாற்றும் செம்மலாகத் திகழுவதற்கு இருந்த நல்வாய்ப்பு, பறிக்கப்பட்டுப் போய்விடுகிறதே, என்பது. ஆனால், பொய்க்கோபம் காட்டி நின்றாயே அதற்கு முன்பு, ஓர் புன்னகை பூத்திருந்ததே, மறுக்காதே தம்பி! அந்தப் புன்னகைக்குக் காரணம் என்ன? மகிழ்ச்சி! மகிழ்ச்சிக்குக் காரணம்? என்ன? கூறமாட்டாய்! தெரியும் எனக்கு! மூச்சடக்கிக் கடலடிசென்று, முத்து எடுக்கும் இனத்தவரின் வழிவழி அன்றோ! உனக்குக் கடலோரவெண் மணலில், முத்தொன்று, காலிலே தட்டுப்பட்டுக் கிடைத்திடின், பெருமகிழ்ச்சிகொண்டிட இயலாது.

பொங்கும் கடல்! மலைமலையாய் அலை! குமுறிடும் சுழல்! என்று பலர் கூறிடும் வேளையில், அச்சம் கொள்வோரிடம் கூறிடுக! ஆண்மையாளர்களிடம் இவை வெற்றுரை!—என்று உரைத்துவிட்டுப், 'பாய்ந்திடுவான் கடலில், மூழ்கிடுவான் அடிநோக்கி, மூச்சடக்கி; கண்டிடுவான் சிப்பிகளை, கைநிறையக் கொண்டு, மேலே எழும்பிவந்து, காட்டுவான், கரை நிற்போருக்கு, காணீர் நன் முத்து! என்று. அஃதே போல், களம் சென்று, கடும்போரிட்டுக், குருதி கொட்டி, வெற்றியைப் பிடித்திழுத்துவந்து, மற்றையோர்க்குக் காட்டி மகிழவேண்டும் என்பது உன் எண்ணம். ஆனால், கடலோர வெண்மணற்பரப்பிலே நடந்து செல்கையிலேயே, முத்து காலினிலே தட்டுப்படுவது போன்று, களம்நோக்கிநின்றபோதே வெற்றி உன்னை நாடிவந்தது; புன்னகைக்குக் காரணம் அதுவே! ஆயினும், போரிடும் வாய்ப்பினை இழந்துவிடுகிறோமே என்றெண்ணும்போது, சங்கடமாக இருக்கிறது; என்னைக் கண்டதும், இந்த உன் எண்ணத்தைத் தெரிவிக்க பொய்க்கோபம் காட்டுகிறாய்! அல்லவா?

தம்பி! உனக்கு மாதுளைப் பழம் தரவேண்டும், அதனைத் தின்றிடச் சொல்லி, பக்க நின்று பார்த்திட வேண்டும், என்று விரும்புகிறேன். ஏன், என்கிறாய்? மாதுளையின் தோலினை உரித்திடும்போதே வாயினிலே நீர் ஊறும், விரலெல்லாம் சாறுபோன்ற நீர் படியும். அழகான அணிசெய்வோன், செம்பொன்னால் அதனைச் செய்து, அதிலே இடம் செதுக்கி, ஆங்கு வைரம், கெம்பு, வைடூரியம் முதலிய கற்களைப்பதித்து இழைத்தளிக்கும் பான்மைபோல, இயற்கை அன்னை, மாதுளைக் கனியில் கோலம் காட்டியன்றோ அளித்திடக் காண்கிறோம்! மேலே ஒரு நிறம்! உள்ளே, பெரிதும் மஞ்சள் வண்ணம்; ஆங்கு, இரத்தச் சிவப்பு நிறத்தில், சுவைமிகு மாதுளை மணிகள்; பதிக்கப்பட்டு; மணியுடன் மணி உராய்ந்து உருவம் கெடாதிருக்க, இடையிடையே, வெண்மை கலந்த மஞ்சள்நிற மெல்லிய தோலினை அமைத்திருக்கும், பாங்கு, காணக் காண வியப்பளிக்கும். ஆனால், மேற்தோல் நீக்கியதும் மணிகள்மீதுதானே, விருப்பம் பாயும்! எனவே, பலர், மாதுளையின் அமைப்பு காட்டிடும் அழகினைக்கண்டு மகிழும் வாய்ப்பினை இழந்தே விடுகின்றனர்.

தம்பி! உரித்தெடுத்து, ஒவ்வொன்றாக அல்ல, சிறு சிறு பிடி அளவு மாதுளை மணிகளை வாயினில் போட்டதும், சுவைமிகு சாறு கிடைக்கும்! குதப்பிக் குதப்பி, அந்தச் சாறு தரும் சுவையைப் பெறுவாய்! பிறகு? சாறு உண்ட பின்னர், கீழேயன்றோ, துப்பிடுவாய், சாறளித்த, மணிகளை—அவை சக்கையாகிவிட்டன என்பதை உணர்ந்து! அந்த மணிகளைக் கீழே துப்பும்போது, எவரேனும், மாதுளையின் தன்மை அறியாதார் கண்டால், என்ன எண்ணுவர்? செச்சே! பிடிக்காத பண்டம்! அதனால்தான், கீழே துப்புகிறார்! என்றன்றோ, எண்ணுவர்! உனக்கல்லவா, தெரியும், சுவை தரும் சாறு உண்ட பிறகே, சத்தற்றதைக் கீழே துப்பும் உண்மை!!

அதுபோலவேதான், தம்பி! களம்புகத் துடித்து நின்ற உனக்கு வெற்றிச்சாறு கிடைத்துவிட்டது, உண்டு மகிழ்ந்தாய்; உன் புன்னகைதான் அதற்குச் சான்று; சாறு பருகிய பின்னர், மாதுளை மணியின் சக்கையினைக் கீழே துப்புவதுபோல, வெற்றிச் சாறு தரும் சுவை பெற்றான பிறகு, ஒரு பொய்க் கோபம் காட்டி நிற்கிறாய்;

ரோம் நாடு, பேரரசின் இருப்பிடமாய், பெரு வெற்றிகள் திகழ்ந்திடும் எழிலிடமாய் இருந்த காலை, வீரர் குழாம் கூடிடும் வகையிலே, கோடம்பாக்கத்தில், நீல வானத்தையே கொட்டகையாகக் கொண்டு, பல்லாயிரவர் கூடினபோது,

> "தமிழழிக்கும் இந்தியினைத் திணிக்கும் ஆணை பிறப்பித்துவிட்டு, அது குறித்து எழுந்துள்ள அச்சத்தை நீக்கும் வகையிலும் ஐயப்பாட்டினைப் போக்கும் முறையிலும் விளக்கம் அளிக்காமல், பாபுஇராஜேந்திர பிரசாத் தமிழகத்

இல் பவனி வரப்போகிருர். என்ன செய்யப் போகிறீர்கள்? வரவேற்கப் போகிறீர்களா?

என்று, அந்த மாநாட்டுக்குத் தலைமை வகிப்பவன் என்ற முறையில் கேட்டேன்.

"இல்லை! இல்லை! வரவேற்கமாட்டோம்! கருப்புக்கொடி காட்டுவோம்!!

என்று முழக்கமெழுப்பினுய்! கண்முன் தெரிகிறது காட்சி! காதினிலே ஒலிக்கிறது முழக்கம்!

பாபு இராஜேந்திரர் விளக்கம் அளித்துவிட்டுத் தமிழகம் வரவேண்டும்! இல்லையேல், அவருக்குக் கருப்புக் கொடி காட்டவேண்டும்!

என்று கூறினேன். ஆம்! ஆம்! என்று கூறி ஒப்பம் அளித்தாய். உள்ளம் மகிழ்ந்தது! ஊர் மகிழ்ந்தது! இந்தியத் துணைக்கண்டத்தையே, அந்தச் செய்தி ஒரு உலுக்கு உலுக்கிவிட்டது!

உளறித்திரியும் சில்லறைகளின் பேச்சை விட்டுத் தள்ளு, தம்பி! உன் சூளுரை. அடிமுடி அனைத்தையும் கிடுகிடுக்கவைத்தது. ஊரெல்லாம் அடக்குமுறை வலைவீசிப் பிடித்தாலும், பிடிபட்டவர் போக, கருப்புக்கொடி காட்டப் பல்லாயிரவர் இருப்பர், என்பதை நேரு பண்டிதர் கண்ட காட்சியினின்றும், நாடு அறிந்திருக்கிறது. விரட்டினுலும், மிரட்டினுலும், அடித்துத் துரத்தினுலும், வட்டமிட்டு அடித்தாலும் வளையமிட்டு அடித்தாலும், குருதி கொட்டக் கொட்ட அடித்தாலும், கருப்புக்கொடி காட்டிடத் தயங்கமாட்டார்கள் என்பது ஆளவந்தார்களுக்குத் தெரியும். எனவே, கோடம்பாக்கத்தில், உன் முழக்கம் கேட்டு— மூலை முடுக்கெல்லாம் தேடித்திரிந்திடும் பேர்வழிகளைத் தள்ளு —மூலவர்கள் முகம் கருத்தது, மனம் குழம்பிற்று!

கருப்புக் கொடியா? தி. மு. க. வா? ஐயயோ! பொல்லாத பாவிகளாயிற்றே! என்ன நேரிடினும் கலங்கமாட்டார்களே! எடுத்ததைச் செய்தே முடிப்பார்களே! கழகம் கட்டளை பிறப்பித்தால், நிறைவேற்றியே தீருவார்களே! கண்டோமே நேரு வந்தபோது! —என்றெண்ணினர், கூடிக்கூடிப் பேசினர், குமுறிக் குமுறிக் கிடந்தனர்; தூதுவிட்டனர்; துயரப்பட்டனர்; பாகுமொழி பேசிடுவோமா, பல்லைக் காட்டிக் கெஞ்சிடலாமா, அடைப்பம் தாங்கி கோபம் துடைத்திடலாமா, என்னசெய்து, இந்த இக்கட்டை நீக்குவது, என்றெல்லாம் எண்ணி, ஏங்கிக் கிடந்தனர். போலீசும் தூங்கிக்கொண்டில்லை. வட்டம் வட்டமாகச் சென்று, பெயர் என்ன? வயதென்ன? தொழிலென்ன? தோழர்கள் எவரெவர்? என்ற விவரங்களைக் கேட்டறிந்து குறித்தவண்ணமிருந்தனர். அறிவகம் நாடிவந்து அன்புரை பகன்று, ஆற்றலறிவோம்! கொள்கையின் நேர்த்தியும் தெரியும்!, எனினும் குடிஅரசுத் தலைவர், கட்சிகளுக்கு அப்பாற்பட்டவர்—அவருக்குக் கருப்புக் கொடி பிடிக்காதீர்கள்! என்று கூறிக் கொஞ்சியோர் பலப்பலர்—மேலதிகாரிகளும் கூடத்தான்!!

இங்குள்ள இதழ்கள் மட்டுமல்ல, வடநாட்டு இதழ்கள் யாவும், இந்தச் செய்தியை வெளியிட்டன; வெளிநாட்டு இதழ்களிலே என்ன வந்துள்ளன என்பது எனக்கு இனித்தான் தெரியவேண்டும்; எங்கும் ஒரே பரபரப்பு. தம்பி! உன் ஆற்றலை அவர்கள் அறிந்திருக்கிருர்கள்! அன்றைய மாநாடு, ஒரு இலட்சம் மக்கள் திரண்டிருந்ததோர் அருமையான காட்சி என்பதையும் உணர்ந்தனர். எனவே எப்படியும், மனதினைத் தொடவேண்டும், விபரீதத்தை நீக்கிக் கொள்ளவேண்டும், இன்மொழி பேசவேண்டும், இன்னல் ஏற்படாமல் தடுத்துவிடவேண்டும்,என்பதற்காக படாதபாடு பட்டார்கள்.

"பசப்பு அண்ணு! பசப்பு! எல்லாம் வெறும் ஏமாற்று வித்தை! நமது திட்டத்தை முறியடிக்கும் சதி! இனிப்பாகப் பேசினுல் மனம் இளகும் என்பதறிந்து மேற்கொள்ளப்படும் முறை. இதைக் கண்டு நாம் ஏமாறக்கூடாது" என்று கூறிடும் தம்பிமார்கள் ஏராளம். கூறினர். செயற்குழு கூடும்போதுகூட அறிவகம் வந்தனர்; பசப்பு மொழி கேட்டு போரை நிறுத்தவேண்டாம்! என்று உரிமையுடன் கூறினர்; உவகையுடன் கேட்டுக்கொண்டுதான், உள்ளே சென்றேன்.

தம்பி! மாற்ருராயினும் உற்ருராயினும், பேசுவது எவ்வகையானது என்பதனையும், நோக்கம் யாது என்பதனையும், அதனை எந்த அளவு, எந்த முறையில், எந்தச் சமயத்தில், கவனிக்கவேண்டும், என்பதையும் அறிந்தவன்தான் உன் அண்ணன் என்பதை நினைவு படுத்தவா வேண்டும்.

கொஞ்சுமொழி கேட்டுக் கொள்கையை விட்டுவிடுவது என்ருல், கொள்கையே இந்த அளவு உரம் பெற்றிருக்காது.

இனிமை மொழி கேட்டு கொள்கையை விட்டு விடுவதென்ருல், கோகிலகான M. S. சுப்புலட்சுமி 'மன்னும் இமயமலை எங்கள் மலையே' என்று பாடிய போதே, கொள்கையை விட்டுவிட்டிருப்போம்.

பசப்புமொழி கேட்டு, கொள்கையை விட்டுவிடுவதென்ருல், வடக்காவது தெற்காவது! நிம்மையா, யார்? கட்டாரி யார்? டாக்டர் இராதாகிருஷ்ணன் யார்? கிருஷ்ணமேனன் யார்?—என்றெல்லாம் பேசிக் காட்டினரே; அப்போதே, கொள்கையை விட்டுவிட்டிருப்போம் அல்லவா?

நாம் எடுத்துக்கொண்டுள்ள கொள்கையும், அதற்கான திட்டமும், அச்சமூட்டியோ, பசப்புக் காட்டியோ ஒழித்துக் கட்டிவிடக் கூடியன அல்ல; அடக்குமுறை எனும் நெருப்பாற்றில் நீந்திச் செல்ல நேரிடினும், வெந்து நீருனவர்கள் போக மீதமுள்ளோர், இலட்சியப் பயணத்தை மேற்கொள்வர்.

இதை அறிந்திருக்கிருய், எனினும், தம்பி! அறப்போர் நடாத்தி உன் ஆற்றலைக் காட்டிடும் வாய்ப்புப் போய்விடுகிறதே என்ற ஆயாசத்தால்,

அண்ணன் எங்கே பசப்பு வார்த்தை கேட்டு உறுதியைத் தளர்த்திக்கொண்டு விடுவானோ என்று ஐயம் கொள்கிறாய்.

இதிலே, உன் ஐயத்தைவிட, உனக்கு உள்ள போரார்வம் இருக்கிறதே, அதை நான் பெரிதும் மதிக்கிறேன்—அந்த ஆர்வம் கொண்டவர்களை வாழ்த்துகிறேன். கோடம்பாக்கம் மாநாட்டில் நான் கூறியபடி, "போரார்வம் பொங்கிடும் நிலையில் உள்ள படை வரிசை கண்டும், போரிட வழி தராமல் இருக்கும் தலைவனாக இருப்பது, போரிட அழைக்கும் போது, போரிடப் படை வீரர்கள் முன் வராது இருப்பதைக் காணும் தலைவனாக இருப்பதைவிட, மேலானது, மகத்தானது, பெருமைக்கு உரியது.

போர் இல்லை!

ஏன்?

போர் நடாத்த வீரர் இல்லை!

தம்பி! இதுதான், கேவலம்; இழுக்கு.

போர் இல்லை!

ஏன்?

இப்போது தேவையில்லையாம்?

யார், கூறுவது?

அவர்தான்! போரிட ஆர்வம் காட்டியவரேதான்.

தம்பி! இதிலேதான், மாற்றாரே கண்டு மருளத்தக்க, வலிமைமிக்க, உண்மையான, பெருமை, சிறப்பு இருக்கிறது.

கட்டித் தங்கம் இருக்கிறது, அணிபணியாக ஆக்கப்படாமல்!—இப்படி ஒரு நிலை.

அணிபணி செய்வதற்காக உட்காருகிறோம், தொழிலிடத்தில்—ஆனால் கட்டித் தங்கம் இல்லை!—இப்படி ஒரு நிலை.

தம்பி! இந்த இரு நிலைமைகளில், எது மதிக்கத் தக்கது! பதில், வேறு வேண்டுமா இதற்கு!!

நீ நிற்கிறாய், உன் போன்ற இலட்சக்கணக்கானவர்கள் உடன்வர—களம் புக! ஆனால், போர் இல்லை என்ற அறிவிப்பு கிடைக்கிறது.

களம் புக வாரீர்! கடும் போரிட வாரீர்!—என்று கரடுமீது நின்று அழைக்கிறார் ஒரு தலைவர், ஆனால், குரல் கேட்டு வருவார்தான் இல்லை; என்று வைத்துக்கொள்—எப்படி இருக்கும் அந்த நிலைமை!!

அதுபோலத்தான், தம்பி! இந்த அண்ணன் இப்படித்தான்; அறப்போர் நடத்தப்போகிறோம்; நடத்தப்போகிறோம் என்று நாம் எவ்வளவோ ஆவலாகத் துடித்து நிற்கிறோம், திடீரென்று வேண்டாம் இப்போது என்று அறிவிக்கிறார்—சே! என்ன ஏமாற்றம்! எத்துணை மனச்சங்கடம்!—என்று நீ கூறிடும் நிலை, காணக் காணப் பெருமிதம்கொள்ளச்செய்கிறது.

*

கருப்புக்கொடி காட்டவேண்டாமாமே?

ஆமாம்! செயற்குழு முடிவு!

எவ்வளவு ஆசையாக இருந்தோம்! என்னென்ன எண்ணிக்கொண்டோம் அறப்போர் மாண்புபற்றி!

செயற்குழுவும், நிரம்ப எண்ணிப் பார்த்துத்தான், முடிவு செய்தது. ஐந்துமணிநேரம் நடந்ததாம்.

தம்பி! நமது வட்டாரத்திலே இதுபோல இருக்கும் உரையாடல்.

கருப்புக்கொடி இல்லையாம்.

ஏன்?

அடக்குமுறை வரும் என்ற அச்சம்! நம்ம காமராஜர் கண்டிப்பான நடவடிக்கை எடுப்பார் என்ற திகில்!

இது, தம்பி! காங்கிரஸ் வட்டாரத்தில் பேச்சாக அமையும்; உன் காதில்விழ! ஆனால் தனியாக அவர்கள் பேசுவது, என்னவாக இருக்கும் தெரியுமோ,

கருப்புக்கொடி இல்லையாமே.

ஏன்?

எதற்காகக் காட்டப்போகிறார்கள். அவர்களுக்குத்தான், கேட்டது கிடைத்துவிட்டதே!

அதென்ன, விஷயம்?

இது தெரியாதா, உனக்கு? கோடம்பாக்கத்திலே, கூறினார்கள், இராஜேந்திரபிரசாத் தமிழகம் வருமுன், மொழிபற்றிய தமது ஆணைக்கு விளக்கம் கூறிவிட்டுத்தான் வரவேண்டும் விளக்கம் தராவிட்டால், கருப்புக்கொடி காட்டப்படும் என்று. இந்த இராஜேந்திரபிரசாத், இங்கு வந்தபிறகாவது, பேசக்கூடாதா? அவர்கள் கேட்டுக்கொண்டபடியே, இங்கு வருவதற்கு முன்பே, அய்திராபாத்திலேயே விளக்கம் கொடுத்துப் பேசிவிட்டார்.

என்ன விளக்கம் கொடுத்துப்பேசினார்?

என்ன விளக்கம் வேண்டுமென்று, நீறு மூனாக்காரர் கேட்டார்களோ, அந்த விளக்கத்தைத்தான். இந்தி திணிப்பு இல்லை. இந்தி விஷயமாக, நேருகொடுத்த வாக்குறுதியின்படி செயல்படுவோம், என்று விளக்கம் கொடுத்தார்.

பேச்சுத்தானே! பொதுக்கூட்டத்தில்!!

ஆமாம், நான்கூட அப்படித்தான், மனதுக்குச் சமாதானம் தேடிக்கொண்டேன், ஆனால்...

ஆனால் என்ன......

இவர் பேசினார்! நமது பாரதப்பிரதமரோ, கடிதமே எழுதி அனுப்பினார்!

கடிதமா! அவரா? இதுகளுக்கா!

ஆமாம்! நினைத்தாலே கோபம் கோபமாக வருகிறது. நாம், காங்கிரசுக்கு தூணாக இருக்கிறோம். ஒரு மந்திரிகூட நமக்குக் கடிதம் எழுதுவதில்லை. இந்தக் கழகத்தான் சம்பத்து, "என்ன சொல்லுகிறீர்? என் கழகம் கருப்புக் கொடி காட்ட தீர்மானித்திருக்கிறது இராஜேந்திரபிரசாத்துக்கு. நீங்கள் ஒரு விளக்கம், சமாதானம், கொடுக்கவேண்டும்". என்று.

எப்போது, எழுதினான்?

ஆகஸ்ட்டு மூன்றாம் தேதி!

பாரேன், துணிச்சலை. ஆகஸ்ட் ஆறாம் தேதி கருப்புக் கொடி என்று அறிவித்துவிட்டு. மூன்றாம் தேதி கடிதம் எழுதி, பதில் கேட்டிருக்கிறான். சீனாக்காரன் தொல்லை ஒரு புறம், நாகர்கள் அமளி இன்னோர் புறம், அசாம் ரகளை வேறோர்புறம், இவைகளைக் கவனிப்பாரா, இந்தக் கழகத்தான் கடிதத்தைக் கவனிப்பாரா?

நானும் அப்படித்தான் எண்ணிக்கொண்டேன். இதுகளுக்காவது நேருவாவது கடிதம் எழுதுவதாவது! அவர், பதில் கடிதம் போடவேண்டிய அளவு இதுகள் என்ன, பெரிய மனிதர்களா!!—என்றெல்லாம் எண்ணிக்கொண்டேன். பயல், முகத்தில் கரிபூசிக்கொண்டு வந்து சேருவான் என்று நினைத்தேன்.

ஆனால், நேரு, பதில் கடிதம் கொடுத்திருக்கிறாரே!

வெட்கம் பிய்த்துத் தின்கிறது. என்ன செய்வது. சம்பத் கடிதம் பார்த்த மூன்று மணி நேரத்துக்கெல்லாம், தானே கையெழுத்துப் போட்டு, கடிதம் அனுப்புகிறார். பெயர், பாரதப் பிரதமர்! செய்கிற காரியம் இப்படி இருக்கிறது!!

கழகக்காரர்கள், இதை வெற்றி என்று கொண்டாடாமலா, இருப்பார்கள்?

நமக்குள்ளே பேசிக்கொண்டால், என்ன தப்பு. வெற்றிதான்! இராஜேந்திர பிரசாத் அவசர அவசரமாக விளக்கம் கொடுக்கிறார்; அழுத்தக்காரர் என்கிறார்கள் கோவிந்த வல்லப பந்த். அவர்,பார்லிமெண்டில் பேசுகிறார், இந்தித் திணிப்பு இல்லை; நேரு வாக்குறுதி நிலைக்கும்; ஆங்கிலம் நீடிக்கும்; அதற்கான சட்டம் நிறைவேற்றுவோம்,—என்றெல்லாம்; நேரு கடிதமே போடுகிறார்.

எல்லாம், இந்தப் பயல்கள் கருப்புக்கொடி காட்டுகிறோம், என்று சொன்ன பிறகு!—

அதுதான் எனக்கு வெட்கமாக இருக்கிறது. சாதாரண சமயத்திலே பேசட்டும், கடிதம் போடட்டும், அது ஒன்றும் பிரமாதம் அல்ல; அது எங்கள் தலைவர்களின் பெருந்தன்மையைத்தான் காட்டுகிறது என்று கூறிக்கொள்ளலாம்; நாலு பேரையும் நம்பவைக்கலாம். விளக்கம் கொடு, இல்லாவிட்டால் கருப்புக்கொடி என்று மிரட்டுகிறான்; அப்பா! அப்பா! இதோ இந்தா விளக்கம், என்று இராஜேந்திர பிரசாத் பேசுகிறார். உறுதிமொழியை உறுதிப்படுத்துங்கள் என்று கேட்கிறான் சம்பத்; உடனே, உறுதி! உறுதி! என்று பதில் கடிதம் கொடுக்கிறார் நேரு! நினைத்தாலே, வெட்கமாக இருக்கிறது.

கருப்புக் கொடிக்குப் பயந்துகொண்டுதான், உங்கள் தலைவர்கள், பந்த், நேரு, பிரசாத், மூவரும், விழுந்தடித்துக்கொண்டு, விளக்கம், உறுதிமொழி, கடிதம், தருகிறார்கள். நீ கேலியாகப் பேசினாயே, கருப்புக்கொடி பற்றி, பார்த்தாயா, உன் தலைவர்கள், அடிமுதல் முடிவரை கிடுகிடுத்துப்போனதை, என்று கழகத்தான், கேட்பானா மாட்டானா?

கேட்பானய்யா, கேட்பான். நமது தலைவர்கள் செய்துவிட்ட காரியத்துக்கு, இதுவும் கேட்பான், இதற்கு மேலும் கேட்பான். நம் தலை எழுத்து, கேட்டுக்கொள்ள வேண்டி இருக்கிறது.

அட, குமாரபாளையத்திலே, கூடி, என்னமோ தீர்மானம் போட்டு அனுப்பிவைத்தார்களே, அப்போது இந்த இழவு விளக்கம், உறுதிமொழி கடிதம், இதை அனுப்பி இருக்கக்கூடாதா, நம்ம தலைவர்கள். அப்போதெல்லாம் கல்லுப்பிள்ளையார்போல இருந்துவிட்டு...............

நான்கூடச் சந்தோஷப்பட்டேன். இந்தப் பயல்கள் தீர்மானம் போட்டு அனுப்பினால், சட்டை செய்வார்களா!! பார்! பார்! இதுகள் அனுப்பிய கடிதத்தை, எங்கள் தலைவர்கள், குப்பைக் கூடையிலே தூக்கி வீசினார்கள், என்றெல்லாம் பேசினேன்.

நான்கூடத்தான் பேசினேன். இப்போது? கருப்புக்கொடி காட்டுவோம் என்று மிரட்டினதும்! மூலவர்கள் மூன்றுபேரும், போட்டிபோட்டுக்கொண்டு, காட்டாதே! காட்டாதே! விளக்கம் தருகிறோம்! உறுதிமொழி தருகிறோம்! கடிதம் இதோ! என்று நடந்துகொள்கிறார்கள்.

நாம் பேசுகிறோம், வீராவேசமாக! கழகம் கால் தூசு! இதை எவனும் மதிக்கமாட்டான், கழகம் சொல்லும் போர், வெறும் புஸ்வாணம், என்று.........

ஆமாம்! நம்ம தலைவர்கள் அப்படி இல்லையே! அவர்களை மிரட்ட, புஸ்வாணமே போதும்போல இருக்கிறதே.

கழகக்காரர்கள், நேரு கடிதத்தை, படம் போட்டல்லவா வைத்துக்கொள்வார்கள்!

ஆமாம்! நாம் அவர்களைப்பற்றிக் கேவலமாகப் பேசும்போதெல்லாம், எடுத்து வீசுவார்கள் நமது முகத்தில்.

கழகத்துக்கு வெற்றி தேடித் தருகிறார்கள்—நமக்குக் கேவலத்தை உண்டாக்குகிறார்கள்.

நமது தலைவர்கள்!

ஆமாம் ஆமாம், நமது......தலை......வர்கள்......சே! வெட்கம் பிய்த்துத் தின்கிறது.

* •

காங்கிரஸ் வட்டாரத்திலேயே ஒரு கலக்கம், தம்பி! மூலவர் மூவர், உடனடியாக, ஒருவர் பின் ஒருவராக, கழகம் கேட்ட விளக்கத்தைத் தர, ஆவலும், அவசரமும் காட்டியது. வெறும் நிகழ்ச்சி அல்ல இது, வெற்றி என்பதில் ஐயமில்லை.

கருப்புக் கொடி காட்டப்படுவதற்கு ஆதரவு இல்லை, கழகம் இதை வெற்றிகரமாகச் செய்திட முடியாது, சுட்டுத் தள்ளினால் சுருண்டு விழுவார்கள், நாடு ஏன் என்று கேட்காது, நாதி ஏது? என்று பேசுவார்களே, சில கதராடைகள், அதுதான் உண்மையான நிலைமை என்றால், என்ன நடந்திருக்க வேண்டும்.

கருப்புக் கொடி காட்ட, ஆதரவு தாராதீர்

என்று கூறிவிட்டு, மற்றக் காரியத்தைப் போலீஸ் பார்த்துக்கொள்ளும் என்று இருந்துவிட்டிருக்க வேண்டும்.

கருப்புக் கொடி காட்டுவதை, சட்டம் சமாதானம் சம்பந்தப்பட்ட பிரச்சினையாகக் கருதிவிட்டிருக்க வேண்டும்.

ஆனால், அது நாட்டைக் கலக்கும் அரசியல் பிரச்சினை என்பதை, ஆளவந்தார்கள் உணர்ந்து, ஏற்றுக்கொண்டதால்தான், மூலவர் மூவருமே முன் வந்தனர். இதைத் தவிர்க்க என்ன செய்யவேண்டுமோ, அதைச் செய்திட. இதைவிடக், குறிப்பிடத்தக்க வெற்றி வேறு என்ன வேண்டும். கருப்புக் கொடி காட்டினாலும் இந்த அளவிலும், முறையிலும், வகையிலும், மூலவர்கள் மூவர் முன் வந்து, பேசி இருப்பார்களா, என்பதுகூடச் சந்தேகம்.

அப்படிப்பட்ட மகத்தான வெற்றி கிடைக்கிறது, தம்பி! நீ, களம்புகத் துணிந்து அறிவித்த உடன்!!

தாழ்மையாகக் கேட்டுக் கொள்கிறேன்,

கூடிக் கலந்து பேசுவோம், வாருங்கள்.

குடிஅரசுத் தலைவரின் ஆணைபற்றிப் பொதுவாக நிபுணரின் கருத்தைக் கேட்டறிவோம், வருக!

ஒரு கட்சி, மொழிப் பிரச்சினைபற்றிக் கவனிப்பதைவிட, எல்லாக் கட்சியும் கூடிச் செயலாற்றினால், வெற்றி நிச்சயம்.

குடிஅரசுத் தலைவர் ஆணையில், மாற்றம் தேவை என்றால் எடுத்துச் சொல்லுங்கள்

மாற்றம் ஏற்பட நான், மத்திய சர்க்காருடன் வாதாடுகிறேன், போராடுகிறேன்.

என் சர்க்கார் இதற்குத் துணை நிற்கும் என்று நான் சத்யம் செய்து கொடுக்கிறேன்.

தம்பி! இவையெல்லாம், கழகத்தைக் கண்டதுண்டமாக்க வல்ல வீராதி வீரர் என்கிறார்களே அந்தச் சுப்ரமணியனார் இருக்கிறாரே(!!) அவர் திருவாய் மலர்ந்தருளியவை!!

அவருடைய வாழ்நாளிலேயே இதற்கு முன் எப்போதும் காட்டாத அளவு, பணிவு, குழைவு, கனிவு ததும்பும் முறையில், பத்திரிகை நிருபர்கள் மாநாடு கூட்டிப் பேசினார். இத்தனைக்கும் அவரிடம் இப்போது போலீசுத் துறையும் விடப்பட்டிருக்கிறது.

எனவே, தம்பி! கோடம்பாக்கத்தில், நீ, எடுத்த சூளுரை, வெற்றியை அவர்களே, நம்மைத் தேடிக் கொண்டுவந்து தரவைத்திருக்கிறது.

இந்தித் திணிப்பு முயற்சியை முறியடித்த பெருமை.

நேருவின் வாக்குறுதி காற்றிலே போய்விடாமல், உறுதிப்படுத்தப்பட்ட அருமை.

நம்மை அடக்குமுறை காட்டி ஒடுக்க முடியாது என்பதை ஆளவந்தார்கள் அறிந்து கொண்டுள்ள அரிய உண்மை,

இவ்வளவும், நீ, காட்டுவேன் கருப்புக்கொடி என்று முழக்கமிட்டதிலேயே, கிடைத்திருக்கிறது.

இந்த வெற்றிதான், உன்னைப் புன்னகை புரிய வைக்கிறது.

அறப்போர் நடத்துவதிலே உள்ள ஆர்வம், செயல்பட வழி ஏற்படாமல் போனதால், பொய்க் கோபம் எழுகிறது.

குமாரபாளையத்தில் கூடிய நாளிலிருந்து, செயற்குழு அறிவகத்தில் கூடி, கருப்புக்கொடி காட்டத் தேவையில்லை என்று முடிவெடுத்த நாள்வரை, நடைபெற்ற நிகழ்ச்சிகளை எல்லாம், முறையாக, எண்ணிப் பார்த்தால், எவரும் மகிழ்ச்சிகொள்வர், வெற்றி கிடைத்தது கண்டு பெருமிதம் கொள்வர்.

ஏடுகள் சில, இந்த வெற்றிகண்டு, காங்கிரசார் கலக்கமடையாது இருக்கவேண்டும் என்பதற்காகவும், வெட்கத்தை மறைத்துக்கொள்ளவும், ஈனத்தனமாக எழுதும்! கவலைப்படாதே! இசைவாணன் இல்லாத போது, மந்தி புகுந்து, யாழ் மீட்டுகிறது என்று எண்ணிக்கொள். பெற்றவெற்றி இனிப்பெற வேண்டியவைகளை நினைவுபடுத்தட்டும். வாழ்த்துகிறேன், உனை, வாகை சூடிய, தம்பியை! நீ பெற்ற வெற்றியை உலகுக்கு அறிவிக்கும் முரசொலிதான், மூலவர் மூவர் தந்த உறுதி மொழிகள். மூலவர் மூவர் முரசொலி எழுப்ப, வாகை சூடினாய், வாழ்க, நீ, தம்பி!

அண்ணன்,



"இந்தி திணிப்பு இல்லை"

எனவே கருப்புக்கொடி இல்லை.

—செயற்குழு தீர்மானம்.

செயற்குழுவின் தீர்மானம் கூறுவதாவது:—

மொழிப் பிரச்சினையின் மீது குமாரபாளையத்தில் கூடிய பொதுக் குழு செய்த தீர்மானம் கீழ்க் காணும் நிலைமைகளைக்கொண்டு உருவாகியது:

(அ) இந்தி பேசாத மக்களின்மீது நேரிடையாகவும் மறைமுகமாகவும் நடைபெறும் இந்தித் திணிப்பு.

(ஆ) ஆங்கிலத்தைக் கைவிட்டு இந்தியை மேற்கொள்ளுவதற்காக நாள் குறித்தது.

(இ) இந்த நிலையில் ஆட்சித்துறையில் ஆங்கிலத்தின் இடம்.

(ஈ) பிரதம மந்திரி நேரு அளித்த வாக்குறுதி.

(உ) இந்தியைப்பற்றி குடியரசுத் தலைவர் பிறப்பித்த ஆணை.

இந்தி பேசாத மக்களின்மீது இந்தி திணிக்கப்படாது என்றும், அகில இந்திய அடிப்படையில் ஆட்சித் துறையில் இந்தி மட்டுமே இடம் பெறாது என்றும் சொன்னதின் மூலமாக, இந்தி பேசாத மக்களுடைய குறிப்பாகத் தமிழக மக்களின் அச்சத்தை நேரு வெகுவாகக் குறைத்தார். ஆனால் குடியரசுத் தலைவரின் ஆணையோ, நேரு அளித்த வாக்குறுதிகளைத் தெளிவாகக் குறிப்பிடாததோடு, அதைச் செயல் படுத்தும் முறைகளையும் சொல்லவில்லை. மாறாக, நடைமுறையில் இந்தியை எவ்வாறெல்லாம் கைக்கொள்ளலாம் என்றுதான் அது குறிப்பிட்டது.

இது நேரு அளித்த வாக்குறுதிகளை புறக்கணித்து இந்தியைத் திணிக்கும் நோக்கத்தோடு பிறப்பிக்கப்பட்ட ஆணை எனப் பொதுக் குழு கருதியது.

எனவே, அத்தகைய ஆணை திரும்பப் பெறப்படுதல் வேண்டும் எனவும், அதற்காக ஆகஸ்ட் 30 வரை கெடு தருவது எனவும், அதற்குள் அந்த ஆணை திரும்பப் பெறப்படவில்லையாயின் இந்தி எதிர்ப்புக்குத் தயாராக இருக்குமாறு தமிழக மக்களைக் கேட்டுக் கொண்டும் பொதுக்குழு தீர்மானம் நிறைவேற்றியது.

இந்தத் தீர்மானம் முறைப்படி குடியரசுத் தலைவருக்கு அனுப்பப் பட்டு, அவரிடமிருந்து பதில் வரும் என தி. மு. க. ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்த போது, குடியரசுத் தலைவர் தமிழகம் முழுவதும் உலாவரப் போகிறார் என்ற செய்தி அறிவிக்கப் பட்டது. இது, தமிழர்கள் இந்தித் திணிப்புக்கு அடங்கிவிட்டார்கள் என ஒரு சிலரால் தவறான முறையில் விளம்பரப்படுத்த இடம் தருமாகையால், குடியரசுத் தலைவர் தமிழகத்தில் சுற்றுப் பயணம் செய்யும்போது, நேருவின் வாக்குறுதிகளைப் புறக்கணித்து அவர் ஆணை பிறப்பித்ததை எதிர்க்கும் வகையில்—எதிர்ப்புக் காட்டவேண்டும் எனச் செயற்குழு தீர்மானித்தது.

ஜூலைத் திங்கள் 31ஆம் நாள் கோடம்பாக்கத்தில் கூடிய சிறப்பு மாநாட்டில் குடியரசுத் தலைவருக்குக் கருப்புக்கொடி காட்டுவது என்ற செய்தி அறிவிக்கப்பட்டது.

பந்த் அறிக்கை:-

கழக உறுப்பினர்கள் மட்டும் அல்லாது, பொது மக்களும் இந்தத் தீர்மானத்தில் அக்கறை காட்டினர் என்பதைத் தி. மு. க. கண்டது. நிலைமைகள் உருவாகிக் கொண்டிருக்கையிலேயே, அதிகாரத்தில் உள்ள முக்கியமானவர்களால், சில செய்திகள் கூறப்பட்டன. ஆகஸ்ட் திங்கள் 1ஆம் நாள், உள்துறை அமைச்சர் பந்த் அவர்கள், பிரதம மந்திரியின் வாக்குறுதி கைவிடப்படமாட்டாது எனப் பாராளுமன்றத்தில் (மக்கள் சபையில்) கூறினர். 1965க்குப் [illegible]ம் ஆங்கிலம் நீடிக்கும் என அவர் அறிவித்தார். இதைப்பற்றிய மசோதாவும் ஒன்று வரும் என அவர் மேலும் புகன்றார்.

சென்னை மாநில நிதியமைச்சரும் தம்முடைய நிருபர் கூட்டம் ஒன்றில், மொழிப் பிரச்சனையைப்பற்றி விரிவாக ஆராய்ந்து பிரதம மந்திரியின் வாக்குறுதியும், குடியரசுத் தலைவரின் ஆணையும் ஒன்றுக்கொன்று முரண்படவில்லை என எடுத்துக்காட்ட முயன்றார். அப்படியே முரண் இருக்குமானாலும் ஆணையில் சில திருத்தங்களைச் செய்துகொள்ளலாம் என்றார் அவர்.

மேலும், ஆகஸ்ட் திங்கள் 3-ஆம் நாளன்று, குடியரசுத் தலைவர் ஐதராபாத் நகரில் பேசுகையில், இந்தி திணிக்கப்படமாட்டாது என்றும், நேரு அளித்த வாக்குறுதியைக் கருத்தில்கொண்டே மொழிப் பிரச்சினை பரிசீலிக்கப்படும் என்றும் கூறினர். அதுவுமன்றி, ஆகஸ்ட் முதல் நாளன்று பாராளுமன்றத்தில் உள்துறை அமைச்சரின் அறிவிப்பைப்பற்றியும் குறிப்பிட்டுக் காட்டினர்.

ஆகஸ்ட் 3-ம் நாள் திரு. ஈ. வே. கி. சம்பத், திரு. நேரு அவர்களுக்கு குடியரசுத் தலைவரின் ஆணையைப்பற்றி தி. மு. க-வின் கருத்துக்களைத் தெளிவுபடுத்தியும் நேருவிடமிருந்து வாக்குறுதி கேட்டும் கடிதம் ஒன்று எழுதினர். 'தமது சர்க்கார் கொடுத்த வாக்குறுதியைக் கைவிடாது' என்று நேரு அந்தக் கடிதத்திற்கு உடனடியாக எழுதியபதிலில்குறிப்பிட்டிருந்தார்.

இவையனைத்தையும் தனித்தனியாகவும், மொத்தமாகவும் சேர்த்துக் காணும்போது, அதிகாரப் பொறுப்பில் உள்ளோர் — இந்தப் பிரச்சினையில் தங்கள் சிந்தனையைச் செலவிட்டனர் என்பதையும், இந்தி திணிக்கப்படமாட்டாது என்றும், நேரு அளித்த வாக்குறுதியே

மொழிப் பிரச்சினையில் செய்யும் முடிவுகளுக்கு வழிகாட்டியாகவும் அடிப்படையாகவும் இருக்கும் எனவும். தி. மு. க-வினருக்கும்; பொது மக்களுக்கும் உணர்த்த விரும்புகின்றனர் என்பது தெரிகிறது.

குடியரசுத் தலைவரின் ஆணை:-

அதிகாரப் பொறுப்பில் உள்ளோரின் இந்த நல்லெண்ணத்தைப் பாராட்டும் அதேபோது. அவர்கள் பிரதமரின் வாக்குறுதியும் குடியரசுத் தலைவரின் ஆணையும் ஒன்றுக்கொன்று முரண்படவில்லை எனபதை நிலைநாட்ட முற்படுகின்றனர்என்பதைச்செயற்குழு உணருகின்றது. ஆனால் இது உண்மையல்ல என்பதையும், குமாரபாளையம் பொதுக்குழு சுட்டிக்காட்டியபடி, நேருவின் வாக்குறுதிகளை குடியரசுத் தலைவரின் ஆணையை உள்ளடக்கியதாக இல்லாதது மட்டும் அன்றி முரணாகவும் இருக்கிறது என்பதை செயற்குழு உணர்த்த விரும்புகின்றது.

குடியரசுத்தலைவர், பிரதம மந்திரி, உள்துறை அமைச்சர் ஆகியோர் அளித்த பல வாக்குறுதிகள், குடியரசுத்தலைவரின் ஆணையில் உள்ள குறைபாடுகளைப் போக்க முயலும் முயற்சிகள்என்று செயற்குழு உணருகின்றது. ஆனால், புதிய வாக்குறுதிகள் என்ற முறையில் அவை வரவேற்கப்படுவதோடு, அதிகாரப் பொறுப்பில் உள்ளோர் [illegible]த்தைப் போக்கி, வாக்குறுதிகளை[illegible] செயல்படுத்த விரும்புகிறார்கள் என்பதையும் காணச் செயற்குழு மகிழுகின்றது.

குடியரசுத் தலைவரின் ஆணை, பிரதம மந்திரியின் வாக்குறுதியைச் செயல்படுத்துவதற்கான வழி வகைகளை உள்ளடக்கியதாக இல்லை எனினும், இந்தக் குறை பாராளுமன்ற முறைகளால் உடனடியாக நீக்கப்படும், நீக்கப்பட வேண்டும்எனச் செயற்குழு கருதுகின்றது.

திரு.நேரு அவர்கள் திரு.சம்பத் அவர்களுக்கு அனுப்பியுள்ள கடிதமும், அளிக்கப்பட்டுள்ள வாக்குறுதிகளும், தி. மு. கழகத்தினருக்கும், தென்னக மக்களுக்கும், நீதியும் நேர்மையும் வழங்கப்படும் என்று தெரிவிக்கும் வலிவான சான்றுகள் எனவும் குழு கருதுகின்றது.

மொழிப்பிரச்சினையில் திட்டவட்டமானதொரு விளக்கத்தைத் தமது சுற்றுப்பயணம் தொடங்குவதற்குமுன் குடியரசுத் தலைவர் அளிக்கவில்லை எனறால், அவருக்கு கருப்புக்கொடி காட்டுவது என கோடம்பாக்கம் மாநாட்டில் முடிவு செய்யப்பட்டது.

கோரிய விளக்கம் கிடைத்து விட்டது. அதற்குமுன், உள்துறை அமைச்சரின் திட்டவட்டமான அறிவிப்பும், பிரதம மந்திரியின் தனிக் குறிப்பும் வந்துவிட்டன.

இந்த அறிகுறிகளையெல்லாம் கருத்தில் கொண்டு, நல்லெண்ணத்தைப் பிரதிபலிக்கும் வகையில், கருப்புக்கொடி காட்டுவதை விட்டுவிடவேண்டும எனக் கழகச் செயற்குழு கருதுகின்றது. அதே நேரத்தில், மொழிப் பிரச்சினையில் நிலையான ஒரு முடிவு காணவும், குறைகளைப் போக்கிக்கொள்ளவும், உடனடியான நடவடிக்கைகளை அதிகாரப் பொறுப்பில் உள்ளோர் எடுத்துக்கொள்ளச் செய்யவேண்டியதற்காகப் போராட்டம் நடத்த வேண்டும் என்பதையும் எடுத்துக் காட்டுகின்றது.

கழகம் அனுப்பிய கடிதத்திற்கு, அவர்கள் முன்பு காட்டிய அசட்டைக்கும், இப்போது, வாக்குறுதிகள் முதலியன தருவதில் காட்டும் வேகத்தையும் ஒப்பிடும் போது, மொழிப் பிரச்சினையில் இந்திய சர்க்காரின் நோக்கிலும், போக்கிலும் குறிப்பிடத்தக்க மாற்றம் காணப்படுகிறது என்பதைச் செயற்குழு உணருகிறது. இது சரியான வழியில் காணும் முன்னேற்றம் எனபதோடு, நிச்சயமான வெற்றியுமாகும்.

இந்த மாற்றம் அலட்சியப் படுத்தப்படக்கூடாதுஎனச் செயற்குழு விரும்புகிறது. இதனால், இந்தித் திணிப்பினால் ஏற்படும் தீய விளைவுகளைப் போக்கி, நல்ல சூழ்நிலை உருவாக முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும். அரசியல் சட்டத்தைத் திருத்துவதின்மூலம் மட்டுமே மொழிப்பிரச்சினையில் சிறந்த முடிவுகாண இயலும் என்ற கொள்கையை செயற்குழு மீண்டும் எடுத்துக்காட்டுகிறது. இந்தி பேசாத மாநில மக்களின் பிரதிநிதிகளைக்கொண்ட மாநாடு ஒன்றினை உடனடியாகக்கூட்டவேண்டும்என்றும் செயற்குழு இந்திய சர்க்காரை வற்புறுத்துகிறது.

மொழிப் பிரச்சினையில் ஆர்வத்தோடு ஆதரித்து நின்றதற்காக, கழக உறுப்பினர்களுக்கும், பொது மக்களுக்கும், பத்திரிகைகளுக்கும் செயற்குழு தனது நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு, இந்தப் பிரச்சினையில் இப்போது பெற்றுள்ள இந்த முதல் வெற்றிக்காக அனைவரையும் பாராட்டுகின்றது. ●

‘இந்தித் திணிப்பு-தென்னக மக்கள் கொதிப்பு’

பற்றி

நேருவுக்குக் கடிதம் எழுதிய பாராளுமன்ற உறுப்பினர்கள்:—

1.	என். சிவராஜ்	8.	முல்கோன்கர்
2.	ஈ. வே. கி சம்பத்	9.	சண்முக கவுண்டர்
3.	ஆர். தர்மலிங்கம்	10.	என். பருசா
4.	டாக்டர் கிருஷ்ணசாமி	11.	ஜெய்பால்சிங் (பீகார்)
5.	மகமது இமாம் (மைசூர்)	12.	மகாராஜா கர்ணல்சிங் (பிகானீர்)
6.	ஏ. எம். பருவா (அசாம்)	13.	கே. கெய்க்வாட்
7.	பாபா சாகிப்	14.	எம். எஸ். சுகந்தி
		* 15.	பி. ஆர். மழகவன்கார்

அருமை நண்பர்களே!

ஐயம் வேண்டாம்! இந்தி திணிப்பு இல்லை, என் வாக்குறுதி நிறைவேற்றப்படும். குடிஅரசுத் தலைவரும் இதுகுறித்துப் பேசியுள்ளார்.

தங்கள்

ஜவஹர்லால் நேரு

●

* இந்த முறையில் 15 பாராளுமன்ற உறுப்பினர்கள் கடிதத்துக்கு பண்டித நேரு கடிதம் அனுப்பியதாக, தோழர் சிவராஜ், எம். பி. தெரிவிக்கிறார்.

பொன்னித்தீவின் கன்னித்தெய்வம்

கன்னித்தெய்வத்தைத் தரிசிக்க வெளிநாடுகளிலிருந்தெல்லாம் யாத்ரீகர்கள் வந்தனர், இப்படி வந்த சிலரோடு சேர்ந்துதான் திலகவதியும் தேன்மொழியும் வந்தனர். இவர்களிருவரும் வசதியாக ஓர் வீடு வாடகைக்குத் தேடிப் பிடித்துக்கொண்டு தேன்மொழி கழட்டித் தந்த நகைகளை விற்று வாழ்க்கை நடத்த முனைந்தனர். கன்னித் தெய்வ ஆலயம் செல்வதும் தொழுவதும் வீடு திரும்புவதுமாக அமைந்துவிட்டது இவர்களின் அன்றாட வாழ்க்கை. தேன்மொழியிடம் தன் சோக வரலாற்றைச் சொன்னாள். தாயும் மகளும் கண்ணீர்விட்டுக் கதறினர். ஆற்றுவார் தேற்றுவாரில்லாத இடத்தில் உள்ள இவர்களுக்கு யார் சமாதானம் சொல்வார்கள்? அடுத்து என்ன செய்வதென்று அறியாது திகைத்திருந்தனர்.

மச்சநாதனும் சாது பஞ்சநாதனும் தங்கள் திட்டத்தை நிறைவேற்ற முனைந்தனர். தங்கள் எண்ணம் ஈடேற மக்களின் முழுக் கவனத்தையும் கன்னித்தெய்வம் பக்கம் திருப்பத் தீவிரமான திட்டத்தை மேற்கொண்டனர்.

நாட்டின் நலன் கருதியும், செய்தப் பாவங்களைக் கழுவவும் அரசி நாற்பத்தெட்டு நாள் விரதம் கொள்ளவேண்டுமென்று அரசியாருக்கு, உபதேசம் செய்தான் சாது பஞ்சநாதன். விரதத்திற்கான ஏற்பாடுகள் எல்லாம் செய்யும்படி அரசி ஆணையிட, அனைத்தும் முடித்துத் தந்தான் மச்சநாதன்.

அரசி விரதம் துவக்கிய அதே நாளில், அதிகாரிகள் வியுற்ற நாட்டு மக்களில் பலரும் விரதம் இருக்கத் துவங்கினர். அரண்மனையில் மேளம் அடித்தால் தங்கள் வீட்டில் தாளம்போடும் மக்கள் வேறெப்படி

ப. உ. சண்முகம்

நடப்பர். அரசி விரதம் இருக்கும் நாளில் அரசாங்க அலுவலகளெல்லாம் கவனிக்கும் அதிகாரமனைத்தும் மச்சநாதன் கைக்கு வந்தது. விரத நாட்களில் சாது பஞ்சநாதன் அரசிக்கு ஞானோபதேசம் செய்து வந்தான்.

"ஆசாபாசங்கட்கு ஆளாகி இன்பதுன்பங்களை அனுபவிக்கும் இந்த உடல் மண்ணுக்குச் சொந்தம். நாற்றமடிக்கும் இதனைக்கழுவி நறுமணங்கமழ் சந்தனத்தைத் தடவி, பளபளக்கும் பட்டாடைகளைச் சுற்றி, விண்மீன்களைப் பழிக்கும் வைர நகைகளைப் பூட்டிவைத்தாலும், பரமன் தந்த உயிரெனும் உயர் பொருள் பிரிந்தால் இந்த உடல்...கண்ணுக்கு அழகாக உள்ள இந்தச்சடலம் மண்ணுக்குள் தான் புதைந்தாகவேண்டும். உயிரோடு வைரநகைகள் துணைசெல்லாது, வையத்தே செய்த பாவ புண்யமே தொடரும். எனவே உயிர் உள்ளபோதே கன்னித் தெய்வத்தை நினைத்திடல் வேண்டும். கரங்கள் துவளுமுன் தொழு! கால்கள் சக்தியற்றுப்போகுமுன் பக்தியோடு வலம் வா! வாயடைத்துப் போகுமுன் பஜித்திடு! காது கேளாதுபோகுமுன் ஞான உபதேசம் கேள்! இப்படியெல்லாம் உண்மையோடு செய்தால் கண் பஞ்சடைந்து போகுமுன் கன்னித் தெய்வம் காட்சிதரக்கூடும்"

இப்படிப் பலரக உபதேசங்களை நாள்தவறாது செய்துவந்தான் சாது பஞ்சநாதன். அரசியின் பக்தி அதிவேகமாக வளரத் துவங்கியது. அரசி ஏறக்குறையப் பண்டாரக் கோலத்திற்கே வந்துவிட்டாள்! அரசியின் படுக்கையோ புலித்தோல்! உடையோ காவி! அணிவது ஜெபமாலை! பணிவது சாது பஞ்சநாதரை! விரதநாள் முடியுந்தருவாயில் அரசி பக்திப் பைத்தியம் பிடித்துவிட்டாள். கன்னித் தெய்வ தரிசனம் கிட்டும் என்று நம்பிக்கையோடிருந்தாள்.



விரதத்தின் கடைசி நாள். அரசி நந்தினி அழைத்துச் செல்லப்பட்டாள் கன்னித் தெய்வத்தின் முன்பு. அரசி மட்டில் தனித்துப்

பூசை செய்தல் வேண்டும் என்றான் சாதுபஞ்சநாதன். அப்படியே அரசி தவிர மற்றவர்கள் வெளியில் வந்து கதவைத் தாளிட்டனர். சாது பஞ்சநாதனும் வெளியில் நின்றான்.

கன்னித் தெய்வத்தின் முன்பு அரசி நந்தினி தியானிக்க அமர்ந்தாள். அரசி கண்மூடிய சிறிது நேரத்திற்கெல்லாம் "குழந்தாய்" என்ற குரல் கேட்டு விழித்தாள். அவளால் நம்பமுடியவில்லை; கண்களைக் கசக்கிவிட்டுப்பார்த்தாள்!

கன்னித் தெய்வச்சிலை இரண்டாகப் பிளந்து நிற்கிறது. இடையே கன்னித்தெய்வம் நின்றுகொண்டுள்ளாள்!

"தாயே!' என்று எழுந்து நின்றாள் நந்தினி.

"குழந்தாய் நந்தினி! உன் பக்தியை மெச்சினோம். உனக்கு என்ன வேண்டும் கேள்"

"தாயே......' நந்தினியால் பேச முடியவில்லை.

"தெரிகிறது. இந்த மாயாப்பிரபஞ்ச வாழ்வைவிட்டு நீங்கி எம்மை வந்தடைய விரும்புகிறாய் அவ்வளவுதானே... அஞ்சாதே; இந்த வையக வாழ்வு எப்போது உனக்கு வெறுக்கிறதோ அப்போதே உன்னை எம்மோடு சேர்த்துக்கொள்வோம். என் பக்தையான உனக்குக் கைலாயத்தின் கதவுகள் எப்போதும் திறந்திருக்கும்'

"என் பாக்கியமே பாக்கியம்!...... இந்த அரசு..."

"அதைப்பற்றிய கவலையே உனக்கு வேண்டாம். இந்த அரசை மச்சநாதனிடம் ஒப்படைத்துவிட்டு வந்துவிடு'

"தங்கள் சொற்படியே நடக்கின்றேன்"

"நீ எம்மை அடைய விரும்பினால், வருகிற வெள்ளிக்கிழமை காலையில் மக்களைக் கூட்டி மச்சநாதனிடம் ஆட்சியை ஒப்படைத்துவிட்டு மக்களோடு என் ஆலயம் வா. இந்தச் சிலை திறக்கும். நீ இங்கேவந்து நின்றதும் உன்னை எம்மோடு சேர்த்துக்கொள்கின்றோம்"

இந்தச் சொல்லோடு சிலை மூடிக்கொண்டது. ஆச்சரியத்தோடு பார்த்து நின்ற அரசி நந்தினி 'தயாபரி......கருணாகரி' என்று பெருங் கூச்சலிட ஆரம்பித்தாள்.

பஞ்சநாதன் கதவைத் திறந்துகொண்டு உள்ளே ஓடிவந்தான். மக்களும் வந்தனர். அரசி வெறிபிடித்தாற்போல் "குருநாதரே, குருநாதரே! நான் கன்னித்தெய்வத்தைக் கண்டேன்......கன்னித்தெய்வத்தைக் கண்டேன்" என்று வெறிபிடித்தாற்போல் கத்தினாள்.

"என்ன?......தாங்கள் என்ன சொல்கிறீர்கள்?" என்றான் பஞ்சநாதன்.

"கன்னித்தெய்வம் காட்சி தந்தாள். என் இரு கண்களால் கண்டேன்"

"உண்மையாகவா?"

"ஆமாம்....உண்மையாகத்தான் என் தாயைக் கண்டேன். அது மட்டுமல்ல, வருகிற வெள்ளிக்கிழமை என்னைத் தன்னோடு சேர்த்துக்கொள்வதாகவும் சொன்னாள்" என்று கூறியவாறே "கன்னித்தாயே கன்னித்தாயே" என்று சுற்றிச் சுற்றி வலம்வந்தாள். கூடியிருந்த மக்களெல்லாம் ஆனந்தக் கூத்தாடிச் சுற்றிச்சுற்றி வந்தார்கள்.

வெற்றிப் புன்னகையோடு வேடிக்கை பார்த்து நின்றான் சாது பஞ்சநாதன். வந்தவர்களெல்லாம் இருவரின் காலிலும் வீழ்ந்து வணங்கிச் சென்றனர்.

அரசியார் ஆடம்பரமாய் அரண்மனைக்கு அழைத்துச் செல்லப்பட்டாள். ஏராளமான மக்கள் வழிநெடுக வணங்கினர். அவர்களிடையே இளந்தாடியோடு நின்றிருந்தான் இளமையிலேயே முதுமைக் கோலம் பூண்ட அதிகமான்! அவனும் கன்னித்தெய்வ மகிமை

கேட்டுத் தன் பாபவிமோசனத்திற்காக வந்திருந்தான். அரசிக்குக் கன்னித்தெய்வம் காட்சிதந்ததைக் கேள்வியுற்ற அதிகமான் வேக வேகமாக ஆலயம் தேடி ஓடினான். வலம் வந்தான். வணங்கினான். தானும் விரதம் இருக்கத் துவங்கினான்!

திலகவதி, 'கன்னித்தெய்வம் தன் குறையைத்தீர்ப்பாள்' என்று பெரு நம்பிக்கைகொண்டாள். காலையிலும் மாலையிலும் மகளோடு ஆலயத்தை வலம்வந்தாள். இப்படி வந்தபோது ஓர் நாள் தேன்மொழியைப் பார்த்துவிட்டான் அதிகமான். அவன் கண்களால் நம்பமுடியவில்லை.

அரண்மனையில் அலங்கார உடைகளோடு அழகுச் சிலையாகக் கண்டவளை ஆலயத்தே, ஆண்டிக் கோலத்தே உள்ள ஒரு பெண்ணோடு பரிதாபக்கோலம் பூண்டு செல்வதைப் பார்த்தால் எப்படி அவனால் நம்பமுடியும்?

"ஏன் இங்குவந்தாள்? இந்தத் தோற்றத்திற்குக் காரணம்யாது? உடன் செல்லும் மாது யார்? அரசிளங்குமரி இப்படி ஆகக் காரணம் யாது?...ஐயோ...தேன்மொழி...... என் தங்கையே...இந்தப்பாவியால் இப்படி வந்துவிட்டாயோ?...... அம்மா" இப்படித்தான் அவன் நெஞ்சில் கேள்விகளும் குமுறல்களும் எழுந்தன. அவன் கண்கள் ஊற்றுகளாயின. பித்துப் பிடித்தவன்போல் நின்றிருந்தான்.

ஆலயத்தினுள் சென்றவர்கள் வெளியில் வரக்கண்டான். ஏமாற்றமும் ஏக்கமும் நிறைந்த தேன்மொழியின் விழிகளைக் கண்டான். நீரின்றி வாடிப்போயுள்ள பயிர்போல் சோகமே உருவான அவள் தோற்றம் அவன் வேதனையை அதிகப்படுத்தியது. இந்தக் கோலத்தே அவளைக் காண நேரிடும் என்று எண்ணியதே இல்லை தீப்புண்ணில் திராவகம் பட்டது போலாயிற்று அவன் நிலை. வழிந்த கண்ணீர் அவன் தாடியை நனைத்தது 'அவர்கள் எங்கே போகிறார்கள்' என்று அறிந்துகொள்ள அவன் நெஞ்சம் துடித்தது. தொடர்ந்தான்—அவர்கள் அறியாவண்ணம்—அவர்கள் பின்னால்.

தேன்மொழியும் திலகவதியும் செல்லும்போது அவர்கள் எதிரில் ஆலயம் நோக்கிவந்துகொண்டிருந்தான் மந்திரி மச்சநாதன். அவன் வஞ்சியிடம் வழக்கர்போல் கொஞ்சிக்குலாவவந்துகொண்டிருந்தான். வழியிலே நடந்துவரும் தங்கச்சிலை தேன்மொழியை அவன் விழிகள் பார்த்துவிட்டன. 'குந்தகம் ஏதுமில்லாதகுளிர்நிலவோ?...சொர்க்கபுரியின் சொர்ணச்சிலையோ...... படைப்புச் சிற்பியின் கடைசிச் சாதனையோ?' என்று அவன் நெஞ்சில் கேள்விகளை எழுப்பின அவன் விழிகள்.

குனிந்த தலையோடு அக்குணவதி சென்றுவிட்டாள். மச்சநாதன் தனனுடன் வந்தவனை அழைத்தான். ஏதோ சொன்னான்...சென்றுவிட்டான். இதைக் கண்டுவிட்டான் அதிகமான்.

ஆபத்தின் அறிகுறி தேன்மொழியைத் தொடருவதை அறிந்ததும் கொதிப்பேறியது அவன குருதி. தேனமொழியைத் தொடர்ந்து மச்சநாதன் அனுப்பிய ஆள்!...... அவனைத் தொடர்ந்து அதிகமான.

திலகவதியும் தேன்மொழியும் தங்கள் வீடு சென்றனர்.

மச்சநாதனின ஒற்றன இதைக் கண்டு சென்றான்!

அதிகமான் இதைப் பார்த்துத் திகைத்து நின்றான! ஆபத்தான சூழ்நிலையில் சிக்கியுள்ள இவர்களை எப்படிக் காப்பாற்றுவது? என்று அவனுக்குப் புரியவில்லை. நெடு நேரத்துக்குப் பின் அவ் வீட்டின் அருகிலேயே இருப்பதென்று முடிவு கட்டினான்.

(தொடரும்)

மதிப்புரை:

இந்தி ஆதிக்கத்துக்கு
எங்கும் எதிர்ப்பு

சமயமறிந்து கருத்துக்களை வெளியிடுவதில் நமது நண்பர் மா. கி. தசரதன் முன்னணியில் நிற்பவர். கட்டாய இந்தித் திணிப்பின் கடுவேகம் கண்டு, அது ஆகாது தகாது என்று மொழி நூல் வல்லுநர் பலர் வெளியிட்ட கருத்துரைகளை ஒன்று திரட்டி ஒரு சிறு நூலாக்கித் தந்துள்ளார். இது காலமறிந்து செய்த ஒரு நல்ல முயற்சி என்று கூறுவதைவிட நல்ல தொண்டென்றே கூறலாம். எல்லோர் கையிலும் இருக்கவேண்டிய இந்த நூலின் விலை: **0—50 காசுகளேயாகும்.**

கிடைக்குமிடம்:

பாரி நிலையம்,

59, பிராட்வே, சென்னை-1.

4-ம் பக்கத் தொடர்ச்சி

அமைதியினை எண்ணினால் இப்போதுகூட உள்ளம் புல்லரிக்கின்றது.

திடீரென்று ஒரு நாள் தொழிலாளர் சிலர் எங்களை அணுகினார்கள். என்னையும், என் உறவினர் சுற்றத்தார் அனைவரையும் வண்டியில் ஏற்றினார்கள். மேலும் என்னென்ன இன்னல்களுக்கு ஆளாக வேண்டுமோ என்று அஞ்சிய வண்ணம் வண்டியிற் பயணம் செய்தோம். நல்லவேளை பிரிவுத் துன்பம் வராதபடி எல்லாரையும் ஒன்றாக வண்டியில் ஏற்றினார்கள். இங்குகொண்டு வந்துபோட்டார்கள்.

"வழக்கப்படி இந்தச் சோம்பல் நிறைந்த மனிதர்கள் நெடுநாட்கள் எங்களைப்பற்றி நினைக்கவே இல்லை. நாங்கள் குவிந்தபடி கிடந்தோம். உறவினரோடு ஒன்றுகூடி ஓரிடத்தில் குவிந்து கிடப்பது எல்லார் உள்ளத்திலும் அமைதியைத் தந்துகொணடு வந்தது. —என் வரையில் அது ஓரளவுதான். நான் எப்போதும் அடுத்து என்ன நேருமோ என்ற கவலையில் என்னை அறியாமல் ஆழ்ந்துகிடந்தேன். என் உடன் பிறந்தோர் நெஞ்சில் சற்றும் கவலையே ஏற்படவிலலை; எதிர்காலத்தைபபற்றி எண்ணி எண்ணி ஏங்கவில்லை. நிலவிக் கொண்டிருந்த இன்பம் நிலைத்த இன்பம் என்ற மனப்போக்கில்—மகிழ்ச்சியில் திளைத்துக் கிடந்தார்கள்.

"அதோ தெரிகின்றது பாருங்கள், ஒரு மேடு. அந்த மேடு என் இனத்தவர் பலரைத் தன்னுள் புதைத்துக்கொண்டு எழுந்த மேடுதான.

"ஒருநாட் காலை,—எங்களுக்குத் தான உறக்கமும், விழிப்பும் இல்லையே—பரிதியொலி எங்கணும் பரவி வந்த வேளை, திடீரென்று கடப்பாரை ஒலிகள், மண்வெட்டியின் ஓசைகள், வியர்வை சொட்டச் சொட்ட உழைக்கின்ற உழைப்பாளரின பெரு மூச்சுக்கள், நிழலில் நின்ற வண்ணம் அந்த உழைப்பாளர்களை அதட்டி மிரட்டிக் கொண்டு வேலை வாங்கும் பெரிய மனிதர்களின் ஆரவாரப் பேச்சுக்கள் ஆகியன எல்லாம் ஒன்று கலந்து ஒலித்தன. ஆமாம், அந்த மேட்டிலே பெரியதொரு மாளிகை எழுப்புதற்காகக் கடைக்கால் போடப்பட்டுக்கொண்டிருந்தது.

"இந்த மனிதரின் பழக்கந்தான்

தெரியுமே, திடீரென்று நினைத்துக் கொண்டால் எதையாவது செய்வார்கள். செய்யும்போது ஆரவாரம் மிதமிஞ்சி இருக்கும். எதிர்பாராதபடி ஒரு நாள் செய்த சுவடு தெரியாமல் சோம்பிப்போம். செய்தவற்றை எல்லாம் அப்படி அப்படியே போட்டுவிட்டு ஓய்ந்துவிடுவார்கள்.

"அந்தக் கட்டடத்தின் தொடக்க வேலைகள் என்னவோ நல்ல வேளை பார்த்துத்தான் 'சாத்திர சம்பிரதாயங்க'ளோடு தொடங்கப் பெற்றது. எப்பெரும் தவறுகள்—தீமைகள் செய்தாலும், எத்துணைக் கோரமான எண்ணங்கள் உள்ளத்துக்குள் புதைந்து கிடந்தாலும், அவற்றை எல்லாம் மறைப்பதற்கு, அவற்றால் நிகழ்ந்த, நிகழப்போகின்ற கொடுமைகளிலிருந்து,—குற்றச் சாட்டுகளிலிருந்துவிடுபெறுதற்கு ஆர்ப்பாட்டங்கள் நிறைந்த பூசனைகள்தாம் கழுவாய் என்று பணம் படைத்த பெரியோர் கூட்டமும், அக்கூட்டத்தின் பின் சென்று வயிறு வளர்க்கும் படித்தோர் கூட்டமும், அக்கூட்டத்தின் புகழ்மொழியில், இச்சகத்தில் மயங்கி வீழ்ந்த—நடிப்பில் பழக்கப்பட்ட கூட்டமும் இன்றளவும் எண்ணிச் செயலாற்றுகின்றன. அவ்வகைக் கூட்டத்துக்கு ஆள் சேர்க்கும் பெரும் புள்ளிதான்—அது கரும் புள்ளியோ என்னவோ—அந்த மேட்டிலே பெரியதொரு மாளிகை எழுப்ப முனைந்து நின்ற பெருந்தனவான். அவரும் நடத்திக் கண்டார் ஆரவாரம் மிஞ்சிய பெரியதொரு பூசையினை; அங்கே,—கட்டடம் எண்ணியபடி வளர்ந்து மாளிகையாக வேண்டுமென்ற நினைப்போடு.

"இரண்டு மாதங்கள் மெத்தவும் மும்முரமாக வேலைகள் நடந்தன. என்னோடு குவிக்கப்பட்டிருந்த உற்றாரும், உறவினருமான பெரும்பாலோர் ஆழமான அடிப்படைக்குள்ளே புதைக்கப்பட்டுவிட்டனர். நிலத்திலிருந்து மேலே எழுந்த கட்டடம் ஓரடிக்கு மேல் எழவே இல்லை. இடையில் ஏதோ பேரிடர் வந்துவிட்டதாம் அந்தத் தனவானுக்கு. வேலைகள் நிறுத்தப்பட்டன.

"அங்கே கொணரப்பட்டிருந்த பொருள்கள் எல்லாம் போட்டவை போட்டபடி அங்கங்கே கிடந்தன. என் உடன் பிறந்தார் பலர் மண்ணுக்குள் புதைக்கப்பட்டதுதான் மிச்சம். நானும், என்னைச் சார்ந்த மிகச் சிலரும் அங்கே எஞ்சிக் கிடந்தோம். கடைக்காலைச் சுற்றிலும் சிதறிக் கிடந்தோம்.

"நாலைந்து மாதங்கள் வரை அப்பக்கம், வழி தவறிக்கூட யாரும் வரவில்லை. ஆளரவத்தைக் கேட்பதே அங்கே அருமையாக இருந்தது. பிறகு யாரோ சிலர் வந்தனர். அங்கு கிடந்த கற்கள், மரங்கள் முதலியவற்றை நோட்டமிட்டுக்கொண்டு சென்றனர். இரண்டொரு நாட்களுக்குப் பிறகு பகலில் வந்த அதே ஆட்கள் இரவு வேளையிலும் வந்தனர். சும்மா வரவில்லை. அங்கே கிடைக்கும் பொருள்களை—மரங்கள், நல்ல கற்கள் முதலியவற்றை அகற்றிக் கொண்டு போக வந்தனர்.

"அதன் பிறகு ஒரே கிழமை. அங்கே ஒரு மரம் கூட எஞ்சவில்லை. ஒரு கல் விட்டு வைக்கப்படவில்லை. என்னையும் அகற்றிக்கொண்டுதான் போயிருப்பார்கள்! முதல் நாள் வந்த ஒருவன்—இருளில் தட்டுத் தடுமாறிக்கொண்டு வந்தவன் கால் இடறி என்மீது வீழ்ந்துவிட்டான். அவன் தலை என்மீது நன்றாகப் பட்டுவிட்டது. இரண்டு துளிக் குருதியும் என்மீது விழுந்துவிட்டது. பின்னால் வந்தவர்கள் என்னைத் தூக்கிப் புதருக்குள் எறிந்துவிட்டார்கள் — வழியில் இடைஞ்சலாகக் கிடக்கிறேன் என்று. அதன் பிறகு—அப்பப்ப! எவ்வளவு காலம் நான் தனிமையிற்கிடந்து புழுங்கிக்கொண்டிருக்கிறேன்! என் உற்றார், உறவினர்கள் அத்தனைபேரையும் இழந்து, ஓரியாகிவிட்டேனே நான்! ஐயகோ! இனியும் அவர்களைக் காணமுடியுமா? இனியும் அவர்களோடு அளவளாவி மகிழும் நிலை வரப்போகிறதா?

"இதுவரை உரையாடுவதற்கு ஒருவர்கூட இல்லாமல் தனிமையிற் கிடந்தேன். இன்றுதான் பேசும் வாய்ப்புக் கிடைத்தது—உங்களோடு. உள்ளத்தில் உள்ள துயரங்களை அடுத்தவரிடம் எடுத்துச் சொல்வதால் ஓரளவு மன அமைதி பெறமுடியும் என்று மாந்தர்கள் பேசிக்கொள்வார்கள். அது உண்மைதான். இன்று உங்களோடு உரையாடியதால் மனதிற்கூட ஓரளவு அமைதி ஏற்பட்டதுபோல் தோன்றுகின்றது."

கருங்கல் தன் பேச்சை நிறுத்தி விட்டு நெடுமூச்செறிந்தது.

"ஆமாம், புதருக்குள்ளிருந்து இங்கு எப்படி வந்தீர்கள்?" என்றது செங்கற்களில் ஒன்று.

"இங்கே வேலை தொடங்கிய முதல் நாள், கட்டடம் இடர் இல்லாமல் எழும்புவதற்குப் பூசை புரிந்தார்கள் அல்லவா? அதற்குத் தேங்காய் உடைக்கக் கல் தேடிய மனிதர் ஒருவர் புதருக்குட் புகுந்து என்னைத் தூக்கிக் கொண்டு வந்துவிட்டார் இங்கே."

"கருங்கல் என்பது சரியாகத்தான் அண்ணே இருக்கின்றது. நீங்கள் எவ்வளவு உறுதியோடு இன்னலைப் பொறுத்துக்கொண்டு, தனிமையைப் பொறுத்துக் கொண்டு வருகிறீர்கள்!"

"ஆமாம், என் வாழ் நாள் முழுதும் நான் இப்படியே கிடக்க வேண்டியதுதான், உழலவேண்டியதுதான். நான் உறுதியான கருங்கல்லாய் இருந்து என்ன பயன்! என்னைவிட எத்துணையோ மடங்கு உறுதி குறைந்த, வலிமையற்ற செங்கற்கள்தாம் நீங்கள். உங்களால் மன அமைதியோடு வாழ முடிகிறது. மற்றோர்க்குப் பயன்பட முடிகிறது. ஆனால் எத்துணைக் காலம் எறியப்பட்ட வறிய பொருளாக ஏங்கி ஏங்கிக் கிடந்துவிட்டேன் நான். இன்னும் எவ்வளவு ஏங்குதல் வேண்டுமோ! ஐயகோ!"

கருங்கல் புலம்பியது. செங்கற்கள் எல்லாம் அதன்மீது இரக்கங் கொண்டு கண்ணீர் வடித்தன.

அவ்வேளை வந்தார்கள் கூலியாட்கள் திமுதிமுவென்று. தங்கள் கதி என்னாகுமோ என்று அஞ்சி நடுங்கிக்கொண்டு அமைதியாகிவிட்டன செங்கற்கள். ●

காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.